உ

# திருவண்ணாமலை
# திருத்தல விளக்கம்



அருள்மிகு அண்ணாமலையார் அருள்மிகு உண்ணாமுலையம்மன்

வெளியீடு

**அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்**

திருவண்ணாமலை.

<u>உ</u>

திருச்சிற்றம்பலம்

அருள்மிகு அண்ணாமலையார் துணை

# திருஅண்ணாமலை திருத்தல விளக்கம்

"தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்

நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்

ஆடிப் பாடிஅண் ணாமலை கைதொழ

ஓடிப் போம்நம துள்ள வினைகளே"

- திருநாவுக்கரசர்

<u>வெளியீடு</u>

**அருள்மிகு அருணாலேசுவரர் திருக்கோயில்**

திருவண்ணாமலை.

விலை ரூ. 15/-



திருவண்ணாமலை திருத்தலவிளக்கம்



அருள்மிகு அண்ணாமலையார்

அருள்மிகு உண்ணாமுலையம்மன்

உ

அருள்மிகு அண்ணாமலையார் துணை

# திருவண்ணாமலை திருத்தல விளக்கம்

## பொருளடக்கம்


| வரிசை | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலப்பெருமை | 6 |
| 2. | தலப்பெயர்கள் | 9 |
| 3. | கோயில் அமைப்பு | 9 |
| 4. | மூர்த்தி, தலம், தீர்த்தம் விவரம் | 13 |
| 5. | புராண வரலாறுகள் | 14 |
| 6. | தேவி இடபாகம் பெற்றது | 16 |
| 7. | திருக்கார்த்திகைத் தீபதரிசனம் | 18 |
| 8. | மலை வலம் வருதல் - முறையும், பயனும் | 20 |
| 9. | வழிபட்டோர் | 24 |
| 10. | முத்தித்தலங்கள் | 28 |
| 11. | திருவிழாக்கள் | 28 |
| 12. | புராணங்கள் | 30 |
| 13. | திருப்பணிகள் | 31 |
| 14. | திருவண்ணாமலை நகரம் | 32 |
| 15. | தங்குமிடங்கள் | 33 |
| 16. | முற்கால ஆட்சி | 33 |
| 17. | மலை, குகைகள், தீர்த்தங்கள் | 34 |
| 18. | கார்த்திகைத் தீப திருவிழா | 37 |
| 19. | திருக்கோயில் கால பூஜை வகைகள் | 41 |
| 20. | பௌர்ணமி கிரிவலம் சிறப்பு | 41 |
| 21. | பிரார்த்தனை சிறப்பு | 43 |
| 22. | வருடாந்திர / நிரந்தர கட்டளை அர்ச்சனை திட்டம் | 45 |



தொகுக்க உதவியவர் :

**மு. சீனிவாசவரதன்,** எம்.ஏ., எம்.ஏ., எம்.எட்.,

சமயநெறிப் பயிற்சி ஆசிரியர்

அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் திருவண்ணாமலை.






உ

அருள்மிகு அண்ணாமலையார் துணை

"உருவமும் உயிருமாகி ஓதிய உலகுக் கெல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய் நின்றஎம் பெருமான் மிக்க
அருவிபொன் சொரியும் அண்ணா மலையுளாய் அண்டவர் கோவே
மருவிநின் பாதமல்லால் மற்றொரு மாடிலேனே".

(திருநாவுக்கரசர்)

## அண்ணாமலையார் துதி

"மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளரும்
திருமாலும் மறையி னானும்
பணிகொண்ட பாதலத்தும் பூதலத்தும்
மீதலத்தும் பரிந்து தேட
அணிகொண்ட பிரமாண்ட கோளகைபொன்
கோளகையாய் அழகுகாட்ட
கணிகொண்ட ஒருவரையாம் ஒருவரையாம்
அகலாது கருத்துள் சேர்ப்பாம்".

(அருணாசலப்புராணம்)

## 1. தலப்பெருமை

பூலோகத்திலுள்ள சிவத் தலங்களுக்குள்ளே நடுநாயகமாக விளக்கும் திருவண்ணாமலையென்னும் திருத்தலம் நினைத்தவுடனே முக்தியைக் கொடுக்கத்தக்க சிறப்புடையதாக உள்ளது. இது கௌரி நகரம்; தேசு நகரம்; ஞான நகரம்; தலேச்சுரம்; சுத்த நகரம்; தென்கயிலாயம்; சோணகிரி என்றும் பல பெயர்களை உடையது.

இத்தலத்தில் தேவர்களும், முனிவர்களும் முக்தி அடைந்தார்கள். இதன் தென்திக்கில் என்றும் நிலைபெற்று நின்றிருக்கும் ஒரு அற்புத மலையுண்டு. இது லிங்க சொரூபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு "**சோணகிரி**" என்றும் "**அருணாசலம்**" என்றும் பெயர்கள் உண்டு. இதற்கு கீழ்ப்பக்கத்திலிருக்கும் அர்க்கமலையில் தேவேந்திரனும் தென் பக்கத்திலிருக்கும் தெய்வமலையில் இயமனும், மேற்கு பக்கத்திலிருக்கும் தண்ட மலையில் குபேரனும், மற்ற நான்கு

திக்குகளிலும் இருக்கும் மலைகள் நான்கிலும், அவைகளைச் சுற்றியிருக்கின்ற மலைகளில் மற்ற தேவர்களும் இருந்துகொண்டு சுவாமியை மற்றும் அடியார்கள் வணங்குபவர்களாகத் திகழ்கிறார்கள். வச்சிராங்கத பாண்டிய அரசன் **அருணாசல மலையை** வலம் வந்து, பாவம் நீங்கி, கைலாயத்தை அடைந்தார்கள்.

சமய உலகில் புகழ்பெற்ற திருத்தலங்களில் சிறப்பு பெற்ற திருத்தலம் **திருவண்ணாமலை** ஆகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்றாலும் சிறந்த இத்தலம், ஆறு ஆதாரத் தலங்களில் மணிப் பூரகமாகவும், பஞ்சபூதத் தலங்களில் தேயுத்தலமாகவும் விளங்குகின்றது. இம்மலையே எட்டாத மலை என்ற பொருளில் "அண்ணாமலை" என்றும் இம்மலையின் பெயரே ஊர்ப் பெயராகவும் விளங்கி வருவதுடன், சோதி மலையாகவும், பொன் மலையாகவும், கல் மலையாகவும் ஒவ்வொரு யுகத்திலும் மாறியது ஆகும். இங்கே அயன், திருமால் என்னும் இருவருடைய தருக்கைத் தவிர்க்க, அவர்களால் அளவிடமுடியாத சிவலிங்கத் திருவுருவில் அடிமுடி காண இயலாத ஜோதி பிழம்பாக, **லிங்கோத்பவ** மூர்த்தியாக சிவபெருமான் காட்சியளிக்கிறார்.



சிவபெருமானுக்குரிய திருவடிவங்களில் முதலாவதாக அமைவது லிங்கோத்பவமூர்த்தி அது அருவுருவாகும். இறைவன் அருவாகவே நின்றால் உலகுயிர்களுக்குப் பெருநன்மை விளைவிக்க முடியாது என்று திருவுள்ளம் கொண்டு, அவர்களின் கண்காணத் தோன்ற நினைத்தபோது முதலில் அருவுருவாகவும் பின்பு உருவாகவும் தோற்றியருளினார். அருவுக்கும் உருவுக்கும் இடைநின்றதே அருவுருவும் ஆதலின், அதுவே முதல் மூர்த்தி ஆயிற்று. திருமாலும், அயனும் தேட, அடிமுடி காண இயலாத நிலையை சோதிப்பிழம்பாக நின்ற நிலைதான் **லிங்கோத்பவர்** உருவமாகும். திருஞான சம்பந்தப்பெருமான் தாம்பாடிய ஒவ்வொரு திருப்பதிகத்திலும் ஒன்பதாவது பாசுரத்தில் இந்த மூர்த்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

நந்திதேவர் அருணாசலத்தை எல்லா நகரங்களிலும் மேலானதாக உயர்த்திக் கூறும்போது, மார்க்கண்டேய முனிவர் "அண்ணாமலைக்கு எதனால் அத்துணைச் சிறப்பு உண்டாயிற்று"? என்று வினவ, அதற்கு "தில்லையைத் தரிசிப்பதால் முக்தி, காசியில் இறப்பதால் முக்தி, திருவாரூரில் பிறப்பதால் முக்தி, ஆனால் திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி உண்டாகும்."





எவ்விடத்திலும் வாழும் மனிதனும், திருவண்ணாமலையை நினைத்தவுடனே முக்தியை வழங்கி இறைவன் நம்மைக் காக்கின்றான். அருள் வழங்குகிறான், என்றார்.

இத்திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் யாவும் சிறப்புடையனவாகும். இதில் இத்திருத்தலத்தில் நடைபெறும் **திருக்கார்த்திகைத் தீபத்திருவிழா** மிகச் சிறப்புடையது ஆகும். மூவுலகிலும் திருமேனியாகத் காட்சி கொடுத்துத் தீப ஜோதியாகக் காட்சி கொடுக்கும் இடம் இத்தலமாகும். உலகம் முழுவதும் உள்ள மக்கள் இத்திருநாளன்று "**அண்ணாமலையாருக்கு அரோகரா**" என முழக்கமிட்டு இறைவனைக் காணும் நன்னாளாகும்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் அருளிய ஐந்து தேவராத் திருப்பதிகங்களும் சுந்தரர், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர் முதலியோர் அருளிய தனிப்பாடல்கள், பதிகங்கள், பிரபந்தங்கள், போற்றிகள் பாடி சிறப்புற்றது இத்தலம். சூரியன், சந்திரன், பிரதத்தராசன், அஷ்டவசுக்கள், பிரமதேவன், திருமால், புளகாதிபன் முதலியோர் வழிபட்டு அருள் பெற்ற சிறப்புடையது இத்திருத்தலம். இத்திருத்தலத்தில் நடைபெறும். ஒவ்வொரு அபிஷேகங்களும், ஆராதனைகளும் மற்ற எல்லா திருத்தலங்களிலும் நடைபெற்றதற்கு ஒப்பாகும். என அருணாசல புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீசுஅலர் இலைமெய் குளிர்ந்திடும் கொடியின்
வேரில்நீர் சொரிந்திடின்; அதுபோல்
பூசனை அருணை நகரிலே சிறிதும்
புரைஅற நடக்குமே ஆகில்,
காசியே முதல்எத் தலம்எலாம் பூசை
கனம்பெற நடந்ததாம் இலையேல்
ஈசர்வாழ் அந்தத் தலம்எலாம் பூசை
இயற்றிஎன்? இயற்றிடாது இருந்து என்?

(அருணாசலபுராணம் - 76)

தமிழகத்தை ஆண்டு வந்த மன்னர்கள் பலரும் இத்திருக் கோவிலுக்குத் திருப்பணிகள் செய்து சிறப்புப் பெற்றனர். யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களும், தமிழ் அறிஞர்களும் இந்நகரத்தைச் சிறப்பு செய்து இத்தலத்தைப் பற்றிப் பாடல்கள் பாடி உள்ளனர். **இறைவிக்கு இடபாகம் கொடுத்து சிறப்புப் பெற்ற இத்திருத்தலம் பெருமைக்கு உரியது.**

இத்திருத்தலத்தில் பகவான் ரமண மகரிஷி; மகான் சேஷாத்திரி சுவாமிகள்; யோகி ராம்சுரத்குமார்; போன்ற ஞானிகள் வாழ்ந்து, முத்தி அடைந்து இத்தலத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். இன்றும் ஞானிகளும், சித்தர்களும் வாழும் ஆன்மீகத் தலமாகும். "**ஞானத்தபோதனரை வாவென்று அழைக்கும் மலை அண்ணாமலை** " என்ற சிறப்புடன் இத்திருத்தலம் அமைந்துள்ளது. இத்திருத்தலம் திருவண்ணாமலை மாவட்டத்தின் தலைநகராகவும் அமைந்துள்ளது. விழுப்புரம் - காட்பாடி ரயில் பாதையில், திருவண்ணாமலை ரயில் நிலையம் உள்ளது. ரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீ தூரத்தில் இத்திருக்கோவில் அமைந்துள்ளது.

## 2. தலப்பெயர்கள்

திருமாலுக்கும், பிரம்மாவுக்கும் அடிமுடி எட்டாத நிலையில் இறைவன் மலை உருவில் தோன்றியது. ஆதலின் அண்ணாமலை எனப் பெயர் பெற்றது. அண்ணல்மலை, **அண்ணாமலை** என்றாயிற்று எனவும் கூறுவர். அனல் உருவாய் இறைவன் வெளிப்பட்ட மலை என்னும் பொருளில் **அருணாசலம், சோணாசலம்** என்ற பெயர்கள் வடமொழியில் வழங்குகின்றன. முத்திபுரி, தலேச்சுரம், சிவலோகம், சுத்தநகரம், கௌரி நகரம், சோணகிரி, சோணாத்திரி, அருணகிரி, அருணாத்திரி, அருணை எனப் பல பெயர்களைக் கொண்டது இத்தலம்.

## 3. கோயில் அமைப்பு



தமிழகத்தில் விளங்கும் பெரிய திருக்கோயில்களில் மிகவும் சிறப்புற்று விளங்குவது திருவண்ணாமலை திருக்கோயில் ஆகும். இந்நிலத்தை ஆண்ட அரசர்களும் மற்ற அரசர்களும் இத்திருக் கோயிலைச் சிறப்பு செய்து விளங்கினர். இத்திருத்தலம் 24 ஏக்கர் பரப்பில் ஏழு பிரகாரங்களுடன் ஒன்பது ராஜகோபுரங்களுடன் மலையடிவாரத்தில் கிழக்கு நோக்கி அழகுற அமைந்துள்ளது. நான்கு திசைகளிலும் உள்ள உயரமான கோபுரங்கள் எல்லோரையும் மகிழ்விக்கிறது. கிழக்கே உள்ள கோபுரம் இராசகோபுரம் 11 நிலைகளுடனும் 217 அடி உயரமும் உடையதாகவும்





தென்னிந்தியாவின் இரண்டாவது உயரமான கோபுரமாகவும் விளங்குகிறது. இது கிருஷ்ணதேவராயர் காலத்தில் கட்டப்பட்டது. வெளிப்பிரகாரத்தில் உள்ள, அதாவது இறுதிப் பிரகாரத்திலுள்ள நான்கு கோபுரங்களின் அடிப்படைகளும் அக்கோபுரங்களைத் தொடர்ந்து செல்லும் மதில்களின் அடிப்படைகளும் கி.பி.1516-ல் மாபெரும் மன்னர் - கிருஷ்ண தேவராயரால் இடம்பெற்று பெரும்பான்மையான திருப்பணி வேலைகள் அவர் காலத்திலேயே நிறைவு பெற்றன. தெற்கு கோபுரம் திருமஞ்சனகோபுரம் எனப் பெயர் வழங்கலாயிற்று. தினமும் காலையில், அபிஷேக தீர்த்தம் இந்தத் திருவாயில் வழியாக எடுத்து வந்தமையால் **திருமஞ்சன கோபுரம்** என்றும் சிறப்பு பெற்று வருகிறது.

மேற்கு கோபுரம் **பேயகோபுரம்** என்றும் இக்கோபுரம் மலையை நோக்கி உள்ளது. என்றும் சிறப்பு பெறுகிறது. இக்கோபுரத்தின் உட்புறம் உள்ள சிறிய கோபுரத்திற்குக் கட்டைக் கோபுரம் என்று பெயர்.

வடக்கு கோபுரம் **அம்மணி அம்மாள் கோபுரம்** ஆகும். சிவவழிபாட்டினை, மேற்கொண்டு சிவனடியாராக வாழ்ந்த அம்மணி அம்மாள் என்பவர் இக்கோபுரத்தைக் கட்டினார். அவர் பெயராலேயே அந்தக் கோபுரம் விளங்குகிறது. அருகிலேயே அவர் கட்டிய சத்திரமும் அமைந்துள்ளது. இக்கோபுரம் வடதிசை நோக்கி அமைந்துள்ளது. இதன் உட்புறமுள்ள சிறிய கோபுரத்திற்கு **கட்டைக் கோபுரம்** என்று பெயர். பிரதான நுழைவாயிலான கிழக்கு **இராயகோபுரம்** வழியாக உள்ளேச் சென்றால் வலது பக்கத்தில் ஆயிரங்கால் மண்டபமும் இடது பக்கத்தில் கம்பத்திளையனார் சந்நிதியும் உள்ளது. இராயகோபுரத்தின் வடதிசையில் உள்ள வாயிலில் **சித்திரமணிமண்டபம்** என்ற பெயரில் ஆயிரங்கால் மண்டபம் அமைந்துள்ளது. அதன் அருகில் உள்ள பாதாள லிங்கேசுவரர் சந்நிதியில் ரமணமகரிஷி தமது இளம் வயதில் தியானம் இருந்த இடம் அமைந்துள்ளது ஆனந்த நிஷ்டையில் அசையாது அமர்ந்திருந்த இடம் இதுவாகும். எதிரே உள்ள கம்பத்து இளையனார் திருக்கோயில் அருணகிரிநாதருக்குக் காட்சி கொடுத்து முருகப்பெருமான் அமர்ந்த இடமாகும். இச்சந்நிதியின் தென்புறமாக நான்கு புறங்களிலும் திருமாளிகைப் பத்தி உடையதாய்ச் **சிவகங்கைத் தீர்த்தம்** விளங்குகிறது.

சிவகங்கைத் திருக்குளத்தின் வடமேற்கில் சர்வ சித்தி வினாயகர் கோயில் உள்ளது. இவரை வழிபட்டு கீழே இறங்கினால் பெரிய

நந்தியைக் காணலாம். அதற்குப்பின் உத்திராட்ச மண்டபம் உயரமாகக் காணப்படும். இதைக் கடந்து செல்லும்போது இடது பக்கம் கல்யாண சுந்தரேஸ்வரர் சந்நிதியும் வலது பக்கம் முருகப் பெருமான் சந்நிதியும் உள்ளது. இன்னும் சற்று உள்ளே வலப்பக்கம் சென்றால் வன்னிமரத்து விநாயகர் திருக்கோயிலும் உள்ளது.

பெரிய நந்திகேசுரருக்கு நேராக வல்லாள **மகாராசா கோபுரம்** உள்ளது. அருணகிரிநாதப் பெருமான் இக்கோபுரத்தின் மீது ஏறி தன்னுடைய வாழக்கையை முடித்துக் கொள்ள கீழே விழுந்தபோது அவரை முருகப் பெருமான் தடுத்து ஆட்கொண்ட இடமாகும். **இத்திருக்கோயிலில் முருகப் பெருமான் இரண்டு இடங்களில் காட்சி கொடுத்து இத்தலத்திற்குச் சிறப்பு செய்துள்ளார்.**

கோபுரத்தை தாண்டி உள்ளே சென்றால் வலது பக்கம் சத்தி விலாச சபா மண்டபமும் தென்புறம் காலபைரவர் சந்நிதியும் உள்ளது. அருகில் பிரம்ம தீர்த்தமும் அமைந்துள்ளது. புரவி மண்டபம் உள்ளது. சிற்பங்கள் நிறைந்த இம்மண்டபம் அருகில் சின்ன நந்திகேசுவரர் உள்ளார். இவருக்கு இடப்பக்கம் ஆணைதிறை கண்ட விநாயகர், நளேசுவரர், வினை தீர்க்கும் விநாயகர், வித்யாதரேசுவரர், பிரம்மலிங்கம், சந்நிதிகள் மற்றும் பசுக்களை பராமரிக்கும் **“கோசாலை”** அமைந்துள்ளது. மூன்றாம் பிரகாரத்தின் நுழைவாயிலில் கிளிகோபுரம் அமைந்துள்ளது. அருணகிரிநாதப் பெருமான் பூத உடலை விட்டுக் கிளியாக மாறி பாரிஜாத மலர் கொண்டு வரச் சென்றார். திரும்பும்போது தன் உடல் இல்லாதது கண்டு கிளி உருவிலே “**கந்தர் அனுபூதி**” பாடிய இடம் இக்கோபுரம் ஆகும். கிளி உருவம் இக்கோபுரத்தில் அமைந்துள்ளது. கோபுர நுழைவாயிலின் வலதுபுறம் பிச்சை இளையனார் சந்நிதி அமைந்துள்ளது.

கிளிக் கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் மூன்றாம் பிரகாரத்தில் பதினாறு கால் மண்டபம் உள்ளது. இதற்குத் **தீபதரிசன மண்டபம்** என்று பெயர். இங்குத் திருக்கார்த்திகை நாளில் பஞ்சமூர்த்திகள் மலையை நோக்கி நிற்க மலை மீது ஜோதி சொரூபமாக மகாதீபம் ஏற்றும் விழா நடைபெறும். இம்மண்டபம் மங்கையர்கரசி என்ற சிவனடியார் கட்டிச் சிறப்பு பெற்றார்கள். இம்மண்டபத்தின் வலதுபுறம் எல்லை தெய்வமாக கருதப்படும் பிடாரி அம்மன் கோயில் உள்ளது. கார்த்திகைத் தீப பெருவிழாவின் போது முதல் மூன்று நாள்





திருவிழாவில் இரண்டாம் நாளன்று பிடாரி அம்மனுக்குப் படையலிட்டுவேண்டி பெருவிழா நடைபெறுகிறது. அருகில் சிதம்பரேஸ்வரர், ஜம்புகேஸ்வரர், ஏகாம்பரேஸ்வரர் ஆலயங்களும் உள்ளன. தென்புறம் பண்டகச் சாலையும் உள்ளது.

மூன்றாம் பிரகாரத்தின் தென்புறம் ஸ்தலவிருட்சமான **மகிழமரமும்,** திருக்கல்யாண மண்டபமும், பின்புறம் அருணகிரி யோகீஸ்வரர் சந்நதியும், வடக்கே அருள்மிகு உண்ணாமுலையம்மன் தனி சந்நதியுடன் சிறப்பாக அமைந்துள்ளது. அம்மன் சன்னதி நேர் எதிரே காளத்தீஸ்வரர் சந்நதியும், அருகில் யாக சாலையும் அமைந்துள்ளது. கொடி மரத்தின் முன் உள்ள பலி பீடத்தின் வடதிசையில் பழனியாண்டவர் சந்நதியும், தெற்கு திசையில் சம்பந்த விநாயகர் ஆலயமும் அமைந்துள்ளது. சம்பந்தவிநாயகர் ஆலயத்தில் உள்ள கல் தூண்கள் சிறந்த சித்திர வேலைப்பாடுகள் நிறைந்ததாகவும், மிகவும் அழகாகவும் அமைந்துள்ளது.

கொடி மரத்தை தாண்டி உள்ளே சென்றால் வடக்கே உண்டி சுப்பிரமணி சுவாமி, தெற்கே விநாயகப் பெருமானும் உள்ளார்கள். அதைக் கடந்து செல்லும் போது அதிகார நந்தியைக் காண முடியும். அவரிடம் ஆசி பெற்று உள்ளே சென்றால் இரண்டாம் பிரகாரம் அமைந்துள்ளது. இப்பிரகாரத்தில் சிவாலயத்தில் அமைய வேண்டிய அனைத்துப் பரிவார தெய்வங்களின் சந்நதிகளும் உள்ளன. தெற்கே நால்வர் உருவங்களும் உற்சவமூர்த்திகளும், 63 நாயன்மார்களின் திருவுருவங்களும் உள்ளன. மேற்கே உற்சவமூர்த்தியான பெரியநாயகர், சோமாஸ்கந்தர் அம்பாள், அர்த்தநாரீஸ்வரர், சந்திரசேகரர், வேணுகோபால் சுவாமி, கெஜலட்சுமி, ஆறுமுகப் பெருமான், வடதிசையில் 63 நாயன்மார்களின் உற்சவ மூர்த்திகள், அதனை அடுத்து வைகுந்தவாயில், சொர்ண பைரவர், திருபள்ளியறை, சிவகாமசுந்தரி நடராசர், சந்நிதிகள் உள்ளன.

நந்தியம்பெருமானை வழிபட்டு அண்ணாமலையார் சந்நிதிக்கு செல்லுமுன் ஆஸ்தான மண்டபத்தில் சூரியன், சந்திரன் மற்றும் பிரதோஷ நந்தி உள்ளனர். பின்னர் துவார பாலகர்களை தரிசித்து கருவறையின் முன்புறமுள்ள அர்த்த மண்டபத்தில் நின்று தரிசிக்கும் போது கருவறையில் அருணாசலேசுவரர் அருளே திருமேனியாகச்

சிவலிங்க வடிவில் காட்சி தருகிறார். சுயம்பு மூர்த்தியான அண்ணாமலையாரை வழிபட்டு வெளியே வந்து முதல் பிரகாரமாகிய மேடையை வலம் வரும் போது கோஷங்களில் தெற்கே தட்சிணாமூர்த்தி, மேற்கு இலிங்கோத்பவர், வடக்கே பிரம்ம துர்க்கை, சண்டேசுவரரை வழிபடலாம்.

இரண்டாம் பிரகாரத்தில் அமைந்துள்ள வைகுந்த வாயிலின் வழியாக வரும் போது தீபமலையை பார்த்து வணங்கி அம்மன் சந்நிதியை அடையலாம். நுழைவாயிலில் ஸ்ரீ விஜயராகவ விநாயகப் பெருமான் சந்நதி உள்ளது. அம்பாள் சந்நதியில் உள்ள மகாமண்டபத்தில் உள்ள தூண்களில் அஷ்டலட்சுமியின் உருவங்களும், ருத்ரதுர்க்கை உருவமும் அமைந்துள்ளது. உள்ளே கருவறையின் முன்னுள்ள அர்த்த மண்டபத்தில் நின்று அம்மனை தரிசிக்கும்போது அருள்மிகு உண்ணாமுலையம்மை சின்னஞ்சிறிய திருவுருவுடன் அருட்காட்சி வழங்கி நம் உள்ளத்தில் இடம் பெறுதலைத் தரிசித்து உணரலாம். கருணை வடிவமாக அனைவருக்கும் தாயாக, பாலினைந்து ஊட்டும் தாயாக, அருளை வழங்கும் அன்னையாக நம்மை காத்து வரும் அருள் விளக்கைக் கண்டு மகிழ்கின்றோம். வடதிசையில் நவக்கிரங்கள், சித்ரகுப்தர் சந்நிதி அமைந்துள்ளது.

## 4. மூர்த்தி, தலம், தீர்த்தம் விவரம்

தலவிநாயகர் : சம்பந்த விநாயகர் இவர் செந்தூரம் அணிந்து திருமேனியோடு காட்சி தருபவர். கயமுகாசுரனைக் கொன்று அவனது குருதியைத் தம்முடலில் இவர் பூசிக் கொண்டதாக வரலாறு.

### மூலவர் (மூர்த்தி) : அருணாசலேசுவரர்



இவர் அண்ணாமலையார் உடையார், திருவண்ணாமலை ஆண்டார், மகாதேவர், ஆள்வார் அண்ணா நாட்டுடையார், இன்னும் பல பெயர்களை கொண்டவர்.

### அம்பிகை : அபீதகுசாம்பாள்



இவரை உண்ணாமலை அம்மை, உண்ணாமுலை நாச்சியார், திருக்காமக் கோட்டமுடைய நம் பிராட்டியார், உலகுடைய பெருமாள் நம் பிராட்டியார் என்று தேவார இலக்கியங்கள் மூலமாக அறிகிறோம்.





### சிறப்புடைய மூர்த்தி : முருகப் பெருமான்



கம்பத்திளையனார், கோபுரத்திளையனார், தேவசேனாதிபதி என்றும் சிறப்பு பெற்றவர். மற்றும் காலபைவரர், துர்க்கை அம்மன், சண்டிகேஸ்வரர், நவக்கிரகங்கள், தட்சிணாமூர்த்தி, ரேணுகாம்பாள், வேணுகோபால், இலக்குமி, லிங்கோத்பவர், இன்னும் சிறப்பு மிக்க ஆலயங்களும் தீர்த்தங்களும் உள்ளன.

**தலமரம்** : மகிழமரம் (வகுளம்)

**தீர்த்தம்** : கோவில் உள் அமைந்தவை

சிவகங்கை தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் மலையைச் சுற்றி உள்ள தீர்த்தங்களும் சிறப்புடையன.

## 5. புராண வரலாறுகள்

அடிமுடி தேடியது:

"ஆதிநெடுமால் அயன்காண அன்றுபரஞ்
சோதிப் செழுஞ்சுடராய்த் தோன்றுமலை - வேதம்
முழங்குமலை சிந்திப்பார் முன்னின்று முத்தி
வழங்குமலை அண்ணா மலை".

படைத்தற் கடவுளாகிய நான்முகனும் காத்தற் கடவுளாகிய திருமாலும் தமக்குள் யார் பெரியர் என்பதில் போட்டியிட்டனர். சிவபிரான் அவர்களிடையே ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதியாய்த் தோன்றி தமது அடியையோ முடியையோ காணுகின்றவர் யாரோ அவரே பெரியவர் எனக் கூறி ஓங்கி உயர்ந்து சோதியாய் நின்றார். அவருடைய திருவடிகள் பாதாளம் ஏழினுக்கும் கீழே சென்றது திருமுடி அண்ட முகடுகளைப் பிளந்து உயர்ந்து சென்றது. திருமால் வராக அவதாரம் எடுத்துத் திருவடிகளைக் காணச் சென்றார். நான்முகன் அன்னமாய் வடிவெடுத்துப் பறந்து சென்று திருமுடியைக் காணச் சென்றார். திருமால் முயன்று அடியைக்

காணாது திரும்பினார். நான்முகன் முயன்று தோற்று தாழம்பூவின் உதவியுடன் முடியைக் கண்டதாகப் பொய்யுரைத்து நின்றார் இதனை உணர்ந்த சிவபெருமான் பொய்யுரைத்த பிரமனுக்கு பூலோகத்தில் தலங்கள் அமையாது என்றும், பொய்சாட்சி சொன்ன தாழம்பூ சிவபூஜைக்கு ஏற்கலாகாது என்றும் பெருமான் அருளிச் செய்தார். இருவரும் சிவபரம்பொருளே உலகில் முழுமுதற் பரம்பொருள் என்பதனை உணர்ந்தனர். **நான்** என்ற எண்ணம் நீங்கவே இவ்வரலாறு அமைந்துள்ளது. எல்லாமே சிவப்பிரம்மம் என்றும், உலகின் முழுப்பொருள் என்றும் அறிந்து கொள்ள வேண்டும். திருமால், பிரமா இருவரும் அப்பெருமானை வழிபட்டு உண்மை ஞானம் பெற்றனர்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தாம் அருளிய தேவாரத் திருப்பதிகங்களின் ஒன்பதாவது திருப்பாடலில் கூறுகிறார்.

"விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில் புகழோனும்
அளவா வணம் அழலாகிய அண்ணாமலை அண்ணல்
தளராமுலை முறுவல் லுமைதலை வன்னடி சரணே".

திருநாவுக்கரசு சுவாமிகள் லிங்கப் புராணத் திருக்குறுந் தொகையில் பாடல்கள் தோறும் இவ்வரலாற்றை விரித்தருள்கிறார். சுந்தரர் இத்தலத்திற்கு எழுந்தருளித் திருப்பதிகம் அருளிச் செய்தது நமக்குக் கிடைக்கவில்லையாயினும் அடிமுடி தேடிய இத்தல வரலாற்றை

"மாவாய் பிளந்தானும் மலர்மா மிசையானும்
ஆவாஅவர் தேடித் திரிந்தே அலமந்தார் எனவும்
பண்மைய மார்பிரமன் பற்றதும் இடந்தும் அயர்ந்தும்
கண்டிலராய் அவர்கள் கழல் காண்பரிதாயபிரான்."

எனவும் பிறவாறும் குறித்தலைக் காணலாம்.

திருவண்ணாமலை கிருதாயுகத்தில் அக்னிமலையாகவும் திரேதயுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபரயுகத்தில் பொன்மலையாகவும், கலியுகத்தில் கல்மலையாகவும் மாறின எனப் புராணம் கூறும். ஒவ்வொரு யுகத்திற்கு ஏற்ப இம்மலை நெருப்பினால் தோன்றியது என்று குறிப்பிடுகின்றது.





## 6. தேவி இடபாகம் பெற்றது



திருக்கயிலாய மலையில் சிவபரம் பொருளோடு உடனுறையும் உமையம்மையார் விளையாட்டாகப் பெருமான் திருக்கண்களைத் தமது திருக்கரத்தால் மூடினார். சூரிய, சந்திரர்களாவும், அக்னியாகவும் உள்ள அக்கண்களை இறைவியார் மூடியதால் உலகெங்கும் இருள் சூழ்ந்தது. அம்பிகை அஞ்சிக் கையை அகற்றினார். உலகம் ஒளிமயமாயிற்று. ஆயினும் அம்பிகை மூடிய அந்த ஒரு கணம் உலகில் உள்ள உயிர் இனங்கள் துன்பப்பட்டன. இது பாவமாகக் கருதி இதனை போக்கிக் கொள்ள காஞ்சிபுரம் அடைந்து சிவபரம் பொருளைப் பூசித்தார். அங்கே இறைவன் தோன்றினார். பார்வதிதேவியார் சிவபெருமானிடம் இடபாகம் கேட்டார், நீ அவ்வாறே பார்வதிதேவியார் திருவண்ணாமலைக்கு வந்து தவம் இருந்தார். திருவண்ணாமலையை அடைந்து தவமியற்றினால் தனது இடபாகத்தைத் தந்து அருள் வழங்கினார்.

அந்தரியும் மாயவனார் முதலாம் தேவர்
அனைவருக்கும் உபசாரம் அளித்து, "நீங்கள்
வந்தவகை இயம்பும்" என மகிடனாலே
வருந்தியதும் தளர்ந்ததும் வகுத்துச் சொன்னார்
சுந்தரியும், குமரி உடன் "சுடரும் வாளால்
தொடுகளத்தின் மகிடன் உரம் தொலைப்பாய்" என்றாள்;
"விந்தையது புரிவம்" எனப் பணிந்தாள்; அன்னை
விளம்புதல் கண்டு அகம்மகிழ்ந்துவிடை கொண்டாரே

(அருணாசலப்புராணம் 333)

அம்பிகை, திருமால் முதலான தேவர்கள் எல்லோருக்கும் உபசாரம் சொல்லி நீங்கள் இவ்விடத்திற்கு வந்த வகை சொல்லுங்கள் என்று கேட்க, அவர்கள் மகிடாசுரனால் தாங்கள் துன்பப்பட்டுத் தளர்ச்சி அடைந்த வகையை விவரமாகச்

சொன்னார்கள். அதற்குப் பார்வதி துர்க்கையை கூப்பிட்டு, "நீ ஒளிவரும் வாட்படையால் போர்க்களத்தில் மகிடாசுரன் வல்லமை கெடக் கொன்று விடு" என்று சொன்னார். அதற்குத் துர்க்கை "அப்படியே செய்வேன்" என்று பணிந்தார். தாயாகிய பார்வதி இந்த வார்த்தையைச் சொன்ன அளவில், திருமால் முதலானவர்கள் மகிழ்ச்சி அடைந்து வணங்கி விடை பெற்றுக் கொண்டார்கள். மகிடாசுரனைக் துர்க்கை கொன்றார், சிவபெருமான் பார்வதி தேவியாரின் தவத்தைச் சிறப்பித்து இடப வாகனத்தையுடைய ஒளி வடிவாகிய, சிவபிரான் காட்சிகொடுத்தார்.

அருஉருவாம் ஒருசிவனை, அதன்கரைமேல்
புறத்துஇருத்தி அருச்சித் தாள்;நம்
இருவினையும் தவிர்ப்பானுக்கு "என்பாவம்
தீர்த்தான்" என்று இயல்பேர் இட்டாள்;
திருமருவும் பெரும்சுனைக்கு "இனியகட்க
தீர்த்தம்" எனத் திருப்பேர் இட்டாள்;
குருமணியை அருணகிரிப் பெருமானைத்
தொழக்கனகக் கோயில் சார்ந்தாள்.

(அருணாசலப்புரம் 386)

அருவமாயும், உருமாயும் விளங்கும் ஒப்பற்ற சிவனை அந்த நதிக்கரையில் மேல்புறத்தில் எழுந்தருளச் செய்து அருச்சனை செய்தாள்; நம்முடை நல்வினை தீவினை இரண்டையும் நீக்குகின்ற அப் பரமசிவனுக்கு "என் பாவம் தீர்த்தார்" என்று பேரைத் தரித்து, அழகிய அச்சுணைக்குக் "**கட்க தீர்த்தம்**" என்று பெயர் இட்டாள்; நிறம் பொருந்திய மணி ஒத்தவரை, அண்ணாமலையில் எழுந்தருளியிருக்கிற அண்ணாமலையை வணங்கப் பொன்மயமாகிய கோயிலுக்குப் போனாள். கார்த்திகை பரணி நாளில் பிரதோஷ காலத்தில் மலை மேல் ஜோதி யுருவத் தரிசனம் கண்டு எம்பெருமானின் இடப்பாகத்தைப் பெற்றருளினார். சிவபிரான் உண்ணாமுலை உமையாளோடும் உடனாகி ஒருவரானார்.





## 7. திருக்கார்த்திகைத் தீபதரிசனம்



தமிழ் நாட்டில் கோயில்களில் அதி சிறப்புடையதாகத் திகழ்வது திருக்கார்த்திகைத் தீபப்பெரு விழாவாகும். இத்திருக் கோயிலின் பிரதான பிரம்மோற்சவம் இதுவே ஆகும். இத்திருவிழாவின் சிறப்பு என்னவெனில் இறைவன் ஜோதி வடிவமாக தோன்றி; அருள் வழங்கி; அடிமுடி காணாத அளவில் எங்கும் நிலைத்து இருக்கின்றார் என்பதை உணர்த்துவதாகும்.

தீபத் திருவிழா பதினேழு நாட்கள் நடைபெறுகின்றது. முதல் மூன்று நாட்கள் ஸ்ரீதுர்க்கை, ஸ்ரீபிடாரி, ஸ்ரீவிநாயகர் திருவிழாக்களாக அமைகிறது. அதன்பின்னர் கொடி ஏற்றத்துடன் முதல் திருவிழா ஆரம்பமாகிறது. பஞ்சமூர்த்திகள் திருவீதியில் எழுந்தருளி அருள் வழங்குகிறார்கள். காலை, மாலை இரண்டு நேரங்களிலும் வீதியுலா சிறப்பாக நடை பெறுகிறது. ஒவ்வொரு நாள் திருவிழாவிலும் சுவாமி எழுந்தருளும் காட்சி மக்களுக்கு மேன்மை தரக் கூடியது. ஒவ்வொரு நாள் திருவிழாவிலும் வாகனங்களின் சிறப்பு முக்கியத்துவம் உடையது. ஒவ்வொரு வாகனமும் ஒவ்வொரு தத்துவங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. இதற்குத் தனி விளக்கமே உண்டு. காமதேனு, கற்பக விருட்சம், வெள்ளித்தேர், பஞ்ச ரதங்கள், வெள்ளி பெரியரிஷபவாகனம், பிச்சாண்டவர் தங்கமேரு போன்ற சிறப்புடைய வாகனங்களும், திருவிழாக்களும் இந்நகருக்குப் பெருமை வழங்குகின்றது.

இத்திருவிழாவின் பத்தாம் நாள் அதிகாலை 4.00 மணிக்கு **பரணி தீபமும்** அன்று மாலை 6.00 மணிக்கு **மகா தீபமும்** ஏற்றப்பட்டு உலக மக்கள் நல்வாழ்வு வாழ இறைவனைக் காணும் நாள் ஆகும். ஆண்டுக்கு ஒரு முறை வெளியே வரும் அர்த்தநாரீசுவரர் ஆடலோடு தீப தரிசன மண்டபத்திற்கு வந்து பஞ்சமூர்த்திகள் முன்னிலையில் காட்சி தர, அக்கணமே பஞ்சமூர்த்திகளுக்கு தீபாராதனையும் அதே நேரத்தில் மலை உச்சியில் மகாதீபம் ஏற்பப்பட்டு அனைவரும் **"அண்ணாமலைக்கு அரோகரா"** என முழக்கமிட்டு காணும் காட்சி ஒப்பில்லா நிகழ்வு ஆகும்.

**கார்த்திகைத் தீபத்தின் சிறப்பு பற்றி அருணாசல புராணம் கூறுவது :-**

கார்த்திகைக்கு கார்த்திகைநாள் ஒருசோதி
மலைநுனியில் காட்டா நிற்போம்;
வாய்த்துவந்த சுடர்காணில் பசிபிணிஇல்
லாது,உலகில் மன்னி வாழ்வார்;
பார்த்திவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிரும்;இது பணிந்தோர்,கண்டோர்
கோத்திரத்தில் இருபத்துஒர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம் என்றார்.
(அருணாசலப்புராணம் - 159)

புத்திதரும் தீபம் நல்லபுத்திரசம் பத்துமுண்டாம்
சித்திதரம் தீபம் சிவதீபம் - சக்திக்கு
உயிராகும் சோணமலை ஓங்கிவளர் ஞானப்
பயிராகும் கார்த்திகைத் தீபம்

என்பது கார்த்திகைத் தீப வெண்பா.

அன்பர்கள், சிவநெறிச் செல்வர்கள் பலரும் மலையின் மீது ஏற்றப்படும் தீபத்திற்கு நெய் மற்றும் பொருள்கள் வழங்கி இறையருளைப் பெறுகின்றனர். தீபத் திருநாளன்று தீப ஒளியாக திருவண்ணாமலை திகழும். கோபுரங்கள், மற்றும் கோயில் உட்புறம் உள்ள எல்லா இடங்களிலும் தீபம் ஏற்றப்படும். ஆலயம் முழுவதும் மின்விளக்கு அலங்காரத்தில் பிரகாசிக்கும். நகரில் உள்ள அனைவரது இல்லங்களிலும் தீபம் ஏற்றப்பட்டு இறைவனை வழிபடுவர். இத்திருவிழாவை பல இலட்சம் மக்கள் திரளாக வந்து காண்கின்றார்கள்.

இலக்கியங்களில் இவ்விழாவின் பழமையை அறியலாம். "**குன்றின் மேல் இட்ட விளக்கு**" என்பது நம் நாட்டுப் பழமொழி. "**குன்றத்து உச்சிச் சுடர்**" என்று சிந்தாமணியும் "**நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட தலைநாள் விளக்கு**" எனக் கார் நாற்பதும் "**மதிநிறைந்து அறுமீன் சேறும் அகல் இருள் நெடுநாள் மருகு விளக்குறுத்து மாலை தூக்கிய பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய விழவு**" என்று அகநானூறும் கூறும். தொல்காப்பியத்தில் வரும் விளக்கு நிலை என்பதற்கு உரை வகுக்கிறார் "**தொல்கார்த்திகை நாள் விளக்கீடு**" பற்றி திருஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிகத்தில் குறித்தருள்கிறார்.





## 8. மலை வலம் வருதல் - முறையும், பயனும்

இறைவி, இறைவனின் இடபாகம் அடைய, இறைவன் மலையைச் சுற்றிவா எனக் கூற, அம்பிகை தன் சிரம் மீது இருகைகளைக் கூப்பி வலம் வந்ததாகவும், இதன் பிறகே இறைவி இறைவனிடம் இடபாகத்தை அடைந்தார் எனப் புராணங்கள் கூறுகின்றன. மலையை வலம் வருதல் என்பது, சிவபெருமானை வலம் வருதல் ஆகும். எல்லா நன்மைகளும் நமக்கு கிட்டும் என்ற முறையில்தான் இதனை சான்றோர்கள் அமைத்து உள்ளனர். சிவபெருமான் ஜோதிப் பிழம்பாக தோன்றிய வடிவமே மலை ஆகும். இத்தலத்தின் சிறப்பே மலையே சிவலிங்கமாக அமைந்துள்ளது. இம்மலையைச் சுற்றி வருபவருக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மகத்துவம் உடையது எனப் புராணங்கள் கூறுகின்றன.

ஸ்ரீதேயு, ஜோதிலிங்க வடிவமாகி, ஸ்ரீசக்ர வடிவத்தில் அமைந்துள்ள, உலகின் உன்னதமான மேரு என அழைக்கப்படும் பெருமான் **ஸ்ரீ அருணாசலேச்வரலிங்கம்.** தமிழ் நாட்டில் திருவண்ணாமலையில் அமைந்துள்ளது. 2668 அடி உயரமுள்ள இந்த மாமலை உலகெங்கும் ஒளியூட்டி மக்களைக் காத்து வருகிறது. இந்த லிங்கமலைக்கு செம்மலையென்றும், அருள்தரும்மலை என்றும் பெயருடன் விளங்குகிறது. அண்ணாமலையை வலம் செய்ய வேண்டும் என்று ஒரடி வைத்தவர்க்கு பூமியை வலம் செய்த பயன் உண்டாகும் இரண்டடி எடுத்து வைத்தவர்க்குப் புனித நீராடிய பயன் உண்டாகும். மூன்றடி எடுத்து வைத்தவர்க்குப் பலவகை தானங்களைச் செய்த பயன் உண்டாகும்.

இம்மலையை வலம் வருவோர் ஆதிவாரத்தில் சிவபதமும், சோமவாரத்தில் இந்திர வாழ்வும், மங்கள வாரத்தில் பிறவிப் பிணி நீக்கமும், புதவாரத்தில் தேவராகும் தகுதியும், குரு வாரத்தில் மேலான பதவியும், சுக்ர வாரத்தில் விஷ்ணு பதவியும், சனி வாரத்தில் நவக்கிரக தோஷ நிவர்த்தியும் பெறுவர்.

எந்தை யே! அருள் நந்தியே!
அடியவர்க்கு எளியாய்!
சிந்தை யானது மகிழ்ந்தனன்;
அருணையின் சிறப்பால்;
அந்த மாநக ரிடத்திலே
சிவன், அழல் வடிவாய்
வந்தவாறு, உடன் அதுமலை
ஆகியவகையும் (அருணாசலப்புராணம் - 79)

**சிவராத்திரி, வருடப்பிறப்பு, மாதப்பிறப்பு, பௌர்ணமி, கார்த்திகை மாதம் உள்ளிட்ட நாட்களில் பக்தர்கள் கிரிவலம் சுற்றி வருகின்றார்கள். மேல் நாட்டவர்கள் பலரும் தினமும் மலை சுற்றி வருகிறார்கள். கிரிவலம் வருவதால் உடல் ஆரோக்கியமும், மன அமைதியும் நமக்குக் கிடைக்கிறது.** மலையைச் சுற்றி எண் திசைகளிலும் அஷ்டலிங்கம், அஷ்ட நந்திகள், தீர்த்தங்கள் பலவும், பல மண்டபங்களும், பல ஆஸ்ரமங்களும் உள்ளன. மலையைச் சுற்றி வரும் பொழுது ஒவ்வொரு அடிக்கும் ஒரு பலன் உண்டு எனப் புராணங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு லிங்கமும் ஒவ்வொரு சிறப்பைப் பெற்று விளங்குகின்றது.

## இந்திரலிங்கம் (கிழக்கு திசை)



விண்ணுலகில் மன்னனாக விளங்குகின்ற இந்திரன் சிவபெருமானை வணங்கி வழிபாடு செய்கிறான். ஐராவதம் எனும் யானையைத் தன்னிடம் வைத்து எல்லாவற்றையும் எல்லா மக்களும் வழங்கிக்கொண்டிருக்கிறான். அறியாமை என்னும் இருள் நீக்கி ஒளிதரும் வண்ணம், இந்திரதேவன் கையில் வஜ்ராயுதம் தாங்கி வாகனத்தில் அமர்ந்த வண்ணம் வாழ்க்கைத்தத்துவமான அறநெறி எனும் சோமபானத்தை அள்ளித்தரும் கோலமாக உள்ளார்.

## அக்கினி லிங்கம் - தென் கிழக்குதிசை



அனைத்து ஜீவராசிகளுக்கும் தேவையானது அக்கினி ஆகும். ஏழுகைகளும் ஏழு நாக்குகளும் கொண்ட அக்கினி பகவான் வேள்வித்தீயின் தெய்வம், மனிதர்களின் வேண்டுதலை இறைவனிடம் வழங்குபவர். அக்கினி, மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், போன்ற ஜீவராசிகளின் வாழ்க்கைப் பொறியாகும். ஹோமங்களின் அக்கினி வளர்ப்பது மிக முக்கியம். காரணம் அக்னியே இரண்டு யுகங்களுக்கும் இடையே தொடர் சங்கிலியாய் உள்ளது. அக்னியில் உண்டாகும் தெய்வங்களுக்கு நாம் தகுந்த முறையில் வழிபாடு செய்தல் வேண்டும்.





## யமலிங்கம் - தென்திசை



மனிதன் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப அவனின் ஆத்மா சுத்தம் அடைகிறது. மீண்டும் பிறவாமல் இருப்பதற்கு வழிவகுக்கும் இவர் மரணத் தெய்வமாக இருந்தாலும் நமது உணர்வுகளுக்கு முதலிடம் கொடுத்து மாயையில் சிக்கித் தவித்து அழிவை நோக்கிப் போனால் ஆத்மாவிற்கு பிறவியும் மறுபிறவியும் மாறி மாறி வரும் என்பதை உணரவைப்பவர். தீர்ப்பளித்துத் தண்டனை கொடுப்பவராயினும் அவர் நேர்மை பிறழாதவர் ஆத்மாவிற்குத் தண்டனை அளிப்பதன் மூலம் நாம் மனக் கட்டுப்பாடுடன் இருக்க வேண்டும் என உணர்த்துபவர்.

## நிருதிலிங்கம் - தென்மேற்கு திசை



மனிதன் செய்யும் துன்பக் காரியங்களிலிருந்து விடுதலை பெற ஸ்ரீநிருதியை வழிப்பட்டால் சிறப்பு ஆகும். உள் பிரகாரத்தை நோக்கி மலையைப் பார்த்தால் சிவஜோதி தோன்றுவது போல் உள் உணர்வு ஏற்படும். தென்திசையிலிருந்து மேற்கு திசை திரும்பும் மலை சுற்றும் பாதையில் அமைந்துள்ளது.

## வருணலிங்கம் - மேற்கு திசை



அனைத்து ஜீவராசிகளுக்கும் தேவையான நீர் மூவுலகத்தில் உள்ள நீருக்கெல்லாம் அதிபதி. உலகையே முன்னின்று நடத்துபவர். விண்ணுலகில் உள்ள நதிகள், கடல்கள், மண்ணுலகில் பாயும் ஆறுகள், கடல்கள், நிலத்தடிநீர், எல்லாமே இவர்வசம். நாட்டை செழிக்கவைக்கிறார். மகிழ்வோடு வாழவைக்கிறார்.

## வாயுலிங்கம் - வடமேற்கு திசை



இவரின் தோற்றமே உயிர். காற்றுதான் அனைத்து ஜீவராசிகளுக்கும் ஜீவன். உலகின் இயக்கத்திற்கு உறுதுணை புரிகிறார். எங்கும் வியாபித்து இருக்கிறார். அசைவும் இவரே, நிலைத்து இருப்பவரும் இவரே. உயிர்களுக்கு ஜீவனை அளிக்கும் சுவாசத்தைக் கொடுப்பவர் இவரே.

## குபேரலிங்கம் - வடகிழக்கு



செல்வங்கள் எல்லாம் தன்னகத்தே கொண்டவர் புண்ணிய ஜனநாயகர். சிவனுக்கு நெருக்கமாக இருப்பதால் இவரை சிவசகா என்றும் கூறலாம் செல்வத்தை வளரச் செய்பவர்.

## ஈசான்ய லிங்கம் - வடகிழக்கு திசை



சிவ சொரூபமாக உடல் முழுவதும் திருநீறு அணிந்து சிறந்த மேனியுடன் காட்சி கொடுப்பவர். எல்லோரின் துன்பங்களை தான் ஏற்றுக் கொண்டு மற்றவர்களுக்கு இன்பத்தை வழங்குபவர். உடல் முழுவதும் விபூதி அணிந்து, பூதகணங்கள் சூழ்ந்திருக்க ஜடாமுடியும், முக்கண்ணாலும், சிவசங்கரனாக காட்சி தருபவர். புலித்தோலில் அமர்ந்து தவம்புரியும் சிவனுடைய ஏழு ருத்ரர்களில் ஒருவராகக் காட்சி தருபவர்.

சிவலிங்கமாக அமைந்துள்ள அண்ணாமலையை சுற்றி அமைந்துள்ள இந்த அஷ்ட லிங்க பாலக அமைப்பு சிவபெருமானை வழிபாடு செய்வதாக உள்ளது. சிறப்பு பெற்ற இத்தலம், மலையின் நேர் மேற்கில் ஆதி அருணாசலேஸ்வரர் ஆலயம் உள்ளது. இங்கேயும் பூஜை அபிஷேகங்கள்; திருவிழாக்கள் நடைபெறுகின்றன. மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவை பாடிய இடமும் இங்கு கோயிலாக அமைந்துள்ளது.

மலையின் தெற்கு திசையில் சேஷாத்திரி சுவாமிகள் ஆஸ்ரமம் தட்சணாமூர்த்தி திருக்கோயில்; ரமணாஸ்ரம்; யோகி ராம்சுரத்குமார் ஆஸ்ரமம் மற்றும் மலையைச் சுற்றி தீர்த்தங்களும் அமைந்துள்ளன. மலையின் இடைப்பகுதியில் கந்தாச்சிரமம்; குகைகள்; பாததீர்த்தம்; உண்ணாமுலை அம்மை தீர்த்தம் போன்றவை சிறப்பு சேர்க்கிறது.





## 9. வழிபட்டோர்



முருகப் பெருமான் திருக்கயிலையங்கிரியிலிருந்து சூரனை அழித்தற்குத் தெற்கு நோக்கி வரும் காலத்தில் திருவண்ணாமலையை வழிபட்ட வரலாற்றைக் கந்த புராணத்தில் காணலாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் இத்தலத்தை வழிபட்டு மூன்று திருப்பதிகங்கள் பாடி உள்ளார். இத்தலத்தைப் பாடும் போது அண்ணாமலையாரின் சிறப்பைக் கூறுகின்றார். 4ம் திருமுறை; 5ம் திருமுறை; 6ம் திருமுறை ஆகும்.

"ஓதிமா மலர்கள் தூவி உமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்தோள் சுடர்மழுப் படையினானே
ஆதியே அமரர் கோவே அணியணா மலையுளானே
நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவிலேனே".

என 4ம் திருமுறையில் சிவபெருமான வழிபட்டுள்ளார் மூன்று திருமுறைகளிலும் மொத்தம் 30 பாடல்களைப் பாடி உள்ளார். அண்ணாமலையார் மீது பற்றுக் கொண்டு வழிபாடு செய்து மகிழ்ந்துள்ளார்.

திருஞானசம்பந்த சுவாமிகள் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள அண்ணாமலையாரை வழிபட்டு இரண்டு திருப்பதிகங்கள் பாடி உள்ளார். அண்ணாமலையாரை வழிபட்டு 22 பாடல்கள் பாடியுள்ளார்.

"உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணணார்ந்தன அருவித்திரன் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே".

என 1ம் திருமுறையில் அண்ணாமலையார், உண்ணாமுலை அம்மை பற்றிக் கூறி வழிபாடு செய்துள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், நக்கீரர், கபிலர், பட்டினத்தார், முதலியோர் இத்தலத்தை தம்பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

மாணிக்கவாசக சுவாமிகள் இத்தலத்தில் பலகாலம் தங்கியிருந்து திருவெம்பாவை, திருவம்மானை, ஆகிய திருப்பதிகங்களை அருளியுள்ளார். எட்டாம் திருமுறையாக இப்பாடல்கள் அமைந்துள்ளது.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும்...."

என்ற திருவெம்பாவையின் முதல் பாடலும்

"செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி...."

என்ற திருவம்மானையின் முதல்பாடலும் அமைந்துள்ளது. அண்ணாமலையாரின் சிறப்பை மாணிக்க வாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் தங்கியிருந்து உணர்ந்து வழிபட்டுள்ளார்.

ஞானத்தபோதனர்கள் இத்தலத்தில் வாழ்ந்தும்; தங்கியும்; சிறப்பு கேட்டுப் பாடியும்; வணங்கியும் வழிபட்டார்கள். "**ஞானத் தபோதனரை வாவென்று அழைக்கும் மலை அண்ணாமலை**" - என்று குகை நமச்சிவாயர்; குரு நமச்சிவாயர்; வணங்கி வழிபட்டார்கள்.

குகை நமச்சிவாயர் அருணகிரியந்தாதியில் 100 பாடல்களைப் பாடி உள்ளார். திருவருணைத்தனி வெண்பாவாக 34 பாடல்களைப் பாடியுள்ளார்.

"சொன்னந் தருங்குருவே சோணா சலத்தானே
இன்னம் பிறந்தாலும் இப்படிநின் - சந்நிதியை
நாடக் கிடைத்திடுமோ நன்னெஞ்சே நாமவரைக்
கூடக் கிடைத்திடுமோ கூறு".

(திருவருணைத் தனிவெண்பா)

குருநமச்சிவாயர் அண்ணாமலை மீது வெண்பாபாடி வழிபாடு செய்துள்ளார்.





"மன்னு திரு அண்ணாமலையை, வலம் ஆகவந்து உன்
உன்னு திரு ஐந்தெழுத்தை ஓதினேன் தென் அருணை
நாயகத்தைக் கோவிலிலே நான்கண்டேன், பெற்றெடுத்த
தாயகத்தை கண்டவர்பொன் தாள்".

வச்சிராங்கத பாண்டியன் குதிரை மீதேறி வேட்டையாடி வரும்போது புனுகு பூனை ஒன்றை துரத்திவர அப்பூனை அண்ணாமலையை வலம் வந்து வீழ்ந்து இறந்தது. பாண்டியனின் குதிரையும் உடனிறந்தது. இறந்த குதிரையும், புனுகுபூனையும் வித்யாதரர்களாக மாறி, துர்வாச முனிவர் சாபத்தினால் தமக்கு இப்பிறவி ஏற்பட்டதையும் கூறக் கேட்ட பாண்டியன், தன் மகனிடம் அரசுரிமையைத் தந்துவிட்டு அண்ணாமலையை அடைந்து வலம் வந்ததும் திருப்பணிகள் செய்து தேவேந்திரன் ஆனான். வல்லாள மகாராசன் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவர் சிறந்த சிவபக்தராக விளங்கினார். இரப்போர்க்கு இல்லை என்று கூறாமல், விரதத்துடனும், அறநெறி வழுவாமல் ஆட்சிபுரிந்த இம்மன்னனிடம் உள்ள குறையான குழந்தை செல்வத்தை வழங்க **சிவபெருமானே குழந்தையாக** வந்தார். அவ்வாறு குழந்தையாக வந்தவர், வல்லாள மகாராசனுக்கு ஈமக் கடனைச் செய்து மனக்குறையை நீக்கினார், மாசி மகத்தில் வல்லாள மகாராசனுக்குப் பெருமாள் உத்தரகிரியை இயற்றும் ஐதீக விழா இத்தலத்தில் இன்றும் நிகழ்கிறது. அன்று அண்ணாமலையாருக்கு இராச பட்டாபிஷேகமும் நடைபெறுகிறது.

திருவண்ணாமலையில் அவதரித்தவர் அருணகிரிநாதர். கந்தக் கடவுளருள் பெற்று திருப்புகழ், கந்தரனுபூதி முதலியன அருளியவர். வாழக்கையில் கலப்பெய்தி இத்திருக்கோயிலின் இரண்டாம் கோபுரத்தின் **(வல்லாள மகாராசகோபுரம்)** மீதேறிக் கீழே விழுந்தபோது, முருகப்பெருமான் இவரைக் தடுத்தாட்கொண்டு, சும்மா இரு சொல்லற என உபதேசம் செய்தார். அதன்பின் அருள் வழாங்கி "**முத்தைத்தரு**" என அடியெடுத்து கொடுத்து அருணகிரிக்குத் தீட்சை வழங்கி, பாடும் பணியை செய்யப் பணித்தார். இவர் பாடிய திருப்புகழ் சிறப்பு பெற்றது. திருவண்ணாமலை முருகப் பெருமானுக்கு 79 பாடல்கள் பாடி உள்ளார். பாடும் பணியைச் செய்யச் சொன்னார்.

திருவண்ணாமலையில் அரசு புரிந்த "பிரபுட தேவ மகராயர்" காலத்தில் அரசவைக் கவிஞராக இருந்த சம்பந்தாண்டான் என்னும் தேவி உபாசகருடன் அருணகிரியார் வாதிட்டு வென்றார்.

திருவண்ணாமலை ஆதின முதல் "குருமூர்த்தி தவத்திரு - தெய்வசிகாமணி தேசிகப் பரமாசாரிய சுவாமிகள்" அண்ணாமலையாரை வழிபாடு செய்து இத்தலத்தை ஆண்ட மன்னன் இவரிடம் ஆசிபெற்று திருக்கோயிலின் ஒரு திருச்சுற்று மாளிகை கட்டப்பட்டது. இதற்குரிய ஆதாரம் திருக்கோயிலில் தலவிருட்சமாகிய மகிழ மரத்திற்கு வடக்கிலுள்ள மதிற்சுவரில் சிற்பமாகவே வடிக்கப் பெற்றிருக்கிறது.

தவத்திரு - பாணிபாத்திர சுவாமிகள் அண்ணாமலையாரை திருமஞ்சனத்திற்குக் குடம் வேண்ட பிரம்மதீர்த்தம் இறைவன் அருள் வழங்க தண்ணீரே குடமாக தோன்றி அண்ணாமலையாருக்குத் திருமஞ்சனம் செய்விக்கப்பட்டது. கி.பி. 1259ம் ஆண்டில் மடாலயம் நிறுவி இறைவனை காணவரும் அடியார்க்கு உணவு வழங்கி இறையருள் பெற்றார்.

அன்பே உருவாய் வாழ்ந்த அன்னை மங்கையர்க்கரசியார் அண்ணாமலைக்குச் செய்யும் தொண்டே சிறப்பு என வாழ்ந்தவர். கி.பி.1202ல் வாழ்ந்தமங்கை. இத்தலத்தில் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் மக்கள் வேதனை அறிந்து ஒரு ஏரியை நிர்மானித்தார். தன் மாங்கல்யத்திலிருந்து தங்கத்தை எடுத்து இறை தொண்டு செய்து வழிபட்டார்.

தவத்திரு - சோணசலத்தேவர் அன்றாடம் திருமலையை வலம் வந்து தொண்டர்கள் நடக்கும் போது எழும் தூசிகள் தன் மீது படவேண்டும் என மகிழ்ந்தார் இவர் அண்ணாமலையாரை வழிபட்டு 90 வயது வரை நீண்டகாலம் வாழ்ந்தார்.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள்; வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், சேஷாத்திரி சுவாமிகள், முதலியோர் திருவண்ணாமலை தலத்தைச் சிறப்பு செய்தனர்.

அண்மைக் காலத்தில் வாழ்ந்த ரமண மகரிஷி, சேஷாத்திரி சுவாமிகள், யோகி ராம்சுரத் குமார் சுவாமிகள் அண்ணாமலையார் திருப்பாதங்களை வணங்கி வழிபட்டு வந்தார்கள். மக்களின் நல்வாழ்விற்காக வாழ்ந்த பெரியோர்கள் வாழ்க்கை நெறிமுறையினை வழிவகுத்து தந்தார்கள். யோகிராம் சுரத்குமார் சுவாமிகள் ஞானத் தெளிவாக அனைவருக்கும் ஏற்புடையவராக இறைவனை வணங்கி வாழ்ந்தார்.





## 10. முத்தித்தலங்கள்

தருமையாதீன ஆதி பரமாசாரியர் ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் முத்தி தலங்கள் அனைத்தையும் தொகுத்தருளிய சிவபோகசார வெண்பாவில் இத்தலத்தைக் குறிப்பிட்டருளி உள்ளார்கள்.

"தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல்முதுகுன்றம் - நெல்லைகளர்
காஞ்சி கழுக் குன்றம்மறைக் காடு அருணை காளத்தி
வாஞ்சியம் என முத்தி வரும்".

## 11. திருவிழாக்கள்

சைவ சமயத்தில் சிவதீட்சை பெறுவது மிகமிக இன்றியமையாததாகும். ஆனால் எல்லோரும் தீட்சை பெற இயலாதவாறு, சில இடர்பாடுகள் உள்ளன; என்றாலும் இறைவன் எல்லோர்க்கும் பொதுவானவன். எனவே எல்லா மக்களுக்கும், ஒரு சார்பின்றி இறைவன் அருள்பாலிக்கக் கடமைப்பட்டுள்ளான், தீட்சை பெற்றுக் கொள்ளும் பேறு ஒரு சிலர்க்கே உண்டென்றால் ஏனையோர் நிலை என்னாவது? அவர்கள் உய்வதற்கு வழி என்ன? இதற்குத் திருவிழா ஒன்றே ஆகும்.

திருவண்ணாமலைத் திருக்கோயில் ஓராண்டில் பன்னிரண்டு மாதங்களில் பல்வேறு விழாக்கள் நடைபெறுகின்றன. அண்ணாமலையார் ஆலயத்தில் நடைபெறும் விழாக்கள் தனிச் சிறப்புடையவனவாகும். பெரிய திருவுருவங்கள் வாகனங்களும் மிகப்பெரியன அவற்றிற் கேற்ப அலங்காரங்களும் கண்டு கண்குளிரத்தக்கன. மாதந்தோறும் நடைபெறும் திருவிழாக்கள் அமாவாசை, கிருத்திகை, பிரதோஷம், சுக்கிரவாரம், சோமவாரம், சஷ்டி, சதுர்த்தி ஆகிய நாட்களில் மாதந்தோறும் விழாக்கள் நடைபெறுகின்றன.

**சித்திரை :** இம்மாதம் பத்து நாட்கள் இரவில் வசந்த உற்சவம் நடைபெற்று சித்திரை நட்சத்திரத்தில் இறுதிநாளில் மன்மத தகனம் நடைபெறுகிறது. சித்திரை சதய நட்சத்திரத்தில் அப்பர் சுவாமிகளுடைய திருநட்சத்திர விழா நடைபெறுகிறது.

**வைகாசி :** வைகாசி விசாக நட்சத்திரத்தில் முருகப் பெருமான் திரு அவதாரத்திருவிழா, மூலநட்சத்திரத்தில் திருஞானசம்பந்த சுவாமிகளுடைய திருநட்சத்திர விழா நடைபெற்று வருகிறது. ஞானப்பால் ஊட்டிய நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

**ஆனி :** இத்தலத்தில் தட்சணாயன விழா ஆனி மாதத்தில் தொடங்கி பத்து நாட்கள் நடைபெறுகின்றது. உத்திர நட்சத்திரத்தில் ஆயிரங்கால் மண்டபத்தில் ஸ்ரீ சிவகாம சுந்தரி, ஸ்ரீ நடராசப் பெருமான் எழுந்தருளி ஆனித்திருமஞ்சன பெருவிழா, திருவீதிஉலா வருதல் மகம் நட்சத்திரத்தில் மாணிக்கவாசக சுவாமிகளின் திருநட்சத்திர விழா நடைபெறுகிறது.

**ஆடி :** ஆடியில் ஆடிப்பூரத்தை இறுதி நாளாக கொண்டு பராசக்தி உற்சவம் கொடியேற்றத்துடன் பத்து நாள் நடைபெறும். பத்தாம் நாள் மாலை வளைகாப்பு மண்டபத்தில் அம்பாளுக்கு வளைகாப்பு நடைபெறுகிறது. இரவு அம்மன் சன்னதி எதிரில் தீ மிதித்தல் விழா நடைபெறுகிறது. சுவாதி நட்சத்திரத்தில் சுந்தரர் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

**ஆவணி :** இம்மாதத்தில் விநாயகசதுர்த்தி விழாவும் நடைபெறுகிறது. மூலநட்சத்திரத்தில் சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமத்தல் திருவிழா நடைபெறுகிறது.

**புரட்டாசி :** நவராத்திரி விழா பத்து நாட்கள் திருக்கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது. பத்து நாட்களும் பத்து அவதாரமாக காட்சி வழங்கிறார்.

**ஐப்பசி :** கந்த சஷ்டிவிழா ஆறு நாட்கள் நடைபெறுகிறது. ஆறாம்நாள் சூரசம்ஹாரம் நிகழ்கிறது. அசுவினி நட்சத்திரத்தன்று அண்ணாமலையாருக்கு அன்னாபிஷேகம் நடைபெறுகிறது.

**கார்த்திகை :** திருக்கார்த்திகை பெருவிழா பதினேழு நாட்கள் நடைபெறுகிறது. பத்தாம்நாள் தீபதரிசனம் திருக்கார்த்திகைத் தீப பெருவிழா கொண்டாடப்படுகிறது. இவ்விழா ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இறுதி மூன்று நாட்கள் தெப்பத்திருவிழாவாக நடைபெறுகிறது.

**மார்கழி :** தைமாதம் முதல்நாளை உத்தராயண புண்ணிய காலத் தீர்த்தாந்தமாகக் கொண்டு முன்பத்து நாள்விழா நடைபெறுகிறது. திருவாதிரையன்று முடிவடையுமாறு மாணிக்கவாசக சுவாமிகளுக்குப் பத்து நாள் விழா நடைபெறுகிறது.





திருவாதிரை அன்று ஸ்ரீ சிவகாம சுந்தரி, நடராசப் பெருமான் ஆயிரங்கால் மண்டபத்திலிருந்து திருவீதிக்கு உலா எழுந்தருளுவர். மார்கழி முப்பது நாட்களும் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி பாடல்களுக்கு விளக்கம் வழங்கப்படுகிறது. மாணிக்கவாசகப் பெருமான் திருவண்ணாமலையில் வீற்றிருந்து திருவெம்பாவை பாடிய அடிஅண்ணாமலையில் உள்ள மாணிக்கவாசகர் கோயிலில் திருமுறை பாராயணத்துடன் மலைவலம் வருகிறார்கள். இறுதிநாள் அன்று விசேஷ அபிஷேகங்களும் சிறப்பாக நடைபெறுகிறது.

**தை :** தைமாதம் 2ம் நாள் திருவூடல் திருவிழா நடைபெறுகிறது. தைமாதம் 5ம் நாள் அண்ணாமலையார் மணலூர்பேட்டைக்கு எழுந்தருளுகிறார். இரத சப்தமியன்று, அருள்நிறை அண்ணாமலையார் தீர்த்தவாரியை முன்னிட்டுக் கலசபாக்கம் எழுந்தருளுகிறார். தைப்பூசம் ஈசான்ய தீர்த்தவாரி நடைபெறுகிறது. திருவண்ணாமலையை ஆண்ட அரசர் வீரவைச வைபோக மகாராசன் போரில் மாண்டார் என்ற செய்தி அறிவிக்கப்படுகிறது.

**மாசி :** மாசி மகத்தன்று வல்லாள மாமன்னர்க்கு இறுதிக் கிரியைகள் அண்ணாமலையார் செய்யும் நிகழ்வு நடைபெற்று வருகிறது. மாசி அமர சதுர்த்தியன்று மகாசிவராத்திரி விழா நடைபெறுகிறது. இலட்சதீபம் ஏற்றப்படுகிறது.

**பங்குனி :** பங்குனி உத்தரத்தன்று திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகிறது. தொடர்ந்து மருவுண்ணல், நலுங்கு உற்சவம், பாலிகை விடுதல் உற்சவம் நடைபெறுகிறது.

## 12. புராணங்கள்

திருவண்ணாமலைக்கு இருதலப்புராணங்கள் உள்ளன. ஒன்று "**கண்கட்டி**" மறைஞான சம்பந்தர் அருளியது. "**அருணகிரிப்புராணம்**" என வழங்குவது பிறிதொன்று சைவ எல்லப்ப நாவலர் அருளியது. "**அருணாசலபுராணம்**" என வழங்குவது. இவ்இலக்கியங்கள் திருவண்ணாமலையின் பெருமைகளை அறிவிக்கும். இத்தலத்தின் இலக்கியங்கள் பலவாகும்.

சிறப்பு வாய்ந்த அருணாசலத்தின் மான்மியம் வேத வேதாந்தங்களாயும், ஆகமங்களாலும், பதினென் புராணங்களாலும், தேவார திருவாசகங்களாலும் பெரிதும் வியந்தோதப் பெற்றிருக்கிறது. திருவண்ணாமலை வரலாற்றையும், அதன்கண் தவங்கிடந்தோர் சரிதங்களையும் விரித்துக் கூறியுள்ள தமிழ் நூல்களில் இரண்டே

எவரும் போற்றத்தக்கவை. அவை "அருணகிரி புராணமும்"; "அருணாசல புராணமுமாம்".

அருணையந்தாதி; அருணைக்கலம்பகம்; அண்ணாமலை வெண்பா; சோணசைலமாலை; கார்த்திகை தீபவெண்பா; உண்ணாமுலையம்மை பிள்ளைத் தமிழ் முதலிய ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் குறிப்பிடத்தக்க சிறப்புடையன.

## 13. திருப்பணிகள்

திருவண்ணாமலைத் திருக்கோயில் மன்னர்கள் பலராலும் திருப்பணிகள் செய்யப்பட்டன. இதனை இங்குள்ள 119 கல்வெட்டுக்கள் அரசால் ஏற்கப்பட்டு அதன் வாயிலாக நாம் அறியலாம். அருள்நிறை அண்ணாமலையார் ஆலயக்கருவறையில் உள்ள சிவலிங்க மூர்த்தி சுயம்புமூர்த்தி ஆவார். இவ்லிங்க மூர்த்தியைப் பண்டைக் கால மக்கள் மரத்தின் நிழலில் வணங்கினர். சிவலிங்க மூர்த்திக்கு நிழல் கொடுத்துக் கொண்டிருந்தமரம் மகிழமரமாகும். ஆலயத்தில் தலவிருட்சமாக இன்று மகிழமரம் உள்ளது. இதன்பின் படிப்படியாக இவ்ஆலயம் மன்னர்களாலும், சிவநெறிச் செல்வர்களாலும், பலவகையில் வளர்ச்சி பெற்றது.

திருப்பணிகள் பல செய்து ஆன்றோர்கள், சான்றோர்கள்; மன்னர்கள்; இத்திருக் கோயிலை மேலும் சிறப்படையச் செய்தனர். கி.பி. 871-955ல் விஜயாலய சோழர் வழிவந்த முதலாம் ஆதித்திய சோழர் முதலாம் பராந்தக சோழர் ஆகியோர் காலத்தில் கருவறை (மூலட்டானம்) கருங்கல்லால் கட்டப்பட்டது. என கல்வெட்டு கூறுகிறது. 1012-1054ல் முதலாம் இராசேந்திர சோழர், முதலாம் இராசாதிராசன் காலத்தில் ரிஷிகோபுரம் அதைச் சுற்றியுள்ள நான்கு புற சுவரும் கட்டப்பட்டன.

திருவண்ணாமலை ஆதீன முதல் குருமூர்த்தி தெய்வசிகாமணி தேசிகப் பரமாசாரிய சுவாமிகள் கட்டளைப்படி, சோழ மன்னன் ஒருவன் மூன்றாம் பிரகாரச் சுவர் அமைத்துக் கொடுத்தார். கிளிகோபுரம் கி.பி.1063ம் ஆண்டிற்குமுன் வீரராசேந்திர சோழருடைய இரண்டாவது ஆட்சியில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என கல்வெட்டு கூறுகிறது.





உண்ணாமுலை அம்மைக்குத் தனிக் கோயிலாக கி.பி.1179ம் ஆண்டு அதாவது 12ம் நூற்றாண்டில்தான் ஏற்பட்டிருத்தல் வேண்டும். எனத் தெரிகிறது. சோழர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள், ஹொய்சாள மன்னர்கள், விஜயநகர பேரரசர் கிருஷ்ண தேவராயர், தஞ்சை நாயக்க மன்னர்கள்; சிற்றரசர்கள் முதலிய பலராலும் பற்பல காலங்களில் திருப்பணிகள் செய்யப்பட்டன. அம்மன்னர்களைத் தொடர்ந்து அண்மைக் காலத்தில் தமிழக தேவாரத் திருத்தலங்கள் பலவற்றை; பெரும் பொருட்செலவில் திருப்பணிகள் செய்த பெருமைக்குரிய நாட்டுக் கோட்டை நகரத்தார் பெருமக்கள் இத்திருக்கோயிலை திருப்பணி செய்து 12-06-1903; 04-06-1944; 04-04-1976ல் மகாகும்பாபிசேகங்கள் நடைபெற்றன.

தமிழக அரசின் முயற்சியாலும், அறநிலையத்துறையின் ஆன்மீக சிந்தனையாலும், அடியார்களின் ஆதரவுடனும் இத் திருத்தலத்தில் அமைந்துள்ள அருள்மிகு அண்ணாமலையாருக்கும் அருள்தரும் உண்ணாமுலை அம்மைக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் சீரும் சிறப்புடனும் முழுமையாக திருப்பணிகள் செய்யப்பட்டு கடந்த 27-06-2002ல் அஷ்டபந்தன சொர்ணபந்தன மஹா கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) வெகு சிறப்பாக நடைபெற்றது. **(மீண்டும் குடமுழக்கு மிக சிறப்பாக நடைபெற உள்ளது.)**

## 14. திருவண்ணாமலை நகரம்

திருவண்ணாமலை நகரை ஆண்ட அரசர்கள், இந்நகரை சிறப்பான முறையில் வீதிகள் அமைத்தல்; மடங்கள் அமைத்தல்; குளங்கள் அமைத்தல்; மழைநீர் செல்லும் பாதை அமைத்தல்; அன்னசத்திரம் அமைத்தல் இவைகளை குறைவின்றி அக்காலத்தில் அமைத்துக் கொடுத்தனர், திருவீதிகளை தூய்மையாகவைக்க "**திருவீதியாண்டார்**" களை நியமித்தார்கள்.

இந்நகர் தற்போது திருவண்ணாமலை மாவட்டத் தலைநகராக விளங்குகிறது. இந்நகரம் முதல்நிலை நகரமாகவும் சுமார் 5 லட்சம் பேர்களைக் கொண்ட நகரமாகவும் விளங்குகிறது. இந்நகரில் கல்வி வசதி; மருத்துவ வசதி; மாவட்ட ஆட்சியர் தலைமையகம்; அலுவலகங்கள்; தங்கும் வசதிகள் அமைந்துள்ளது.

இங்கிருந்து பெங்களூர், திருப்பதி, பாண்டிச்சேரி, திருவனந்தபுரம் உள்ளிட்ட அண்டை மாநிலங்களுக்கும் சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கோவை, சேலம், உள்ளிட்ட மாநகரங்கள் மற்றும் முக்கிய நகரங்களுக்கும் செல்ல நேரடி பேருந்து வசதியும் உள்ளது.

## 15. முற்கால ஆட்சி

இச்சிறப்பு பெற்ற இத்தலம் முன்காலத்தில் சோழ மன்னர்களால் ஆட்சி செலுத்தப்பட்டு. பின் கி.பி. 14ம் நூற்றாண்டில் ஹொய்சன வம்சத்தினால் இந்நகரைத் தலைமை இடமாகக் கொண்டு அரசு நடத்தி வந்தனர். இவர்களுக்குப் பின் விஜயநகர மன்னர்களும், தஞ்சாவூர் நாயக்க மன்னர்களும் ஆண்டு வந்தனர் எனவும் கூறப்படுகின்றது.

17ம் நூற்றாண்டில் இத்தலம் கர்நாடக நவாப்பின் ஆளுகைக்கு உட்பட்டது. கி.பி. 1753 முதல் கி.பி.1760 வரை மிகுந்த குழப்பத்திற்குள்ளாகி முராரிராயர், கிருஷ்ணராயர், மிருத்திஸ் அலிகான், பாக்கத் உல்லாகான், சூப்பிரே, சாபினே, ஸ்டீபன்ஸ்மித் முதலியோர் இந்நகரினை முற்றுகையிட்டு மாறி மாறி வெற்றியும் தோல்வியும் அடைந்தனர். கி.பி.1790ல் திப்பு சுல்தான் ஆண்டார். 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்நகர் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு வந்தது.

## 16. தங்குமிடங்கள்

அருள்மிகு அண்ணாமலையாரைத் தரிசிக்க வரும் சிவநெறிச் செல்வர்களுக்கும், மெய்யன்பர்களுக்கும் தங்கி வழிபட திருக்கோயில் அருகிலேயே ஆலயத்தின் சார்பாக அருள்மிகு உண்ணாமுலை அம்மை நிலைய விடுதி உள்ளது. சுற்றியுள்ள ஆஸ்ரமங்கள், உணவு விடுதிகள் தங்கும் வசதிகள் கொண்ட விடுதிகள் எல்லாம் உள்ளன. விசேடகாலங்களில் மக்கள், சேவார்த்திகள், தங்குவதற்கு அனைத்து வசதிகளும் அமைந்துள்ளன, இதுபோன்று பேருந்துகளும், இரயில் போக்குவரத்தும், சாலைவசதிகளும் அமைந்துள்ளன.





## 17. மலை, குகைகள், தீர்த்தங்கள் :

### மலை

“சோணகிரி வலம்புரிதல் பிறவி எனும்
பெருங் கடற்குத் தோணி ஆகும்
ஏழ்நரகக் குழிபுகுதாது அரியமுத்தி
வழிக்கு ஏறு ஏணி ஆகும்
காண் அரிய தவத்தினுக்கும் அறத்தினுக்கும்
அரும்பொருட்கும் காணி யாகும்
வாள்நுதல்மின் இடத்திருக்கும் கண்ணுதலை
மனம் உருக்கம் மகிழ்ச்சி யாகும்.”

இங்கு வானுயற ஓங்கி வளம் பெற விளங்கும் மலையினை ஸ்ரீ அண்ணாமலை யண்ணலின் புனித திருவடியாகவே மக்கள் போற்றி வணங்குவர். இதன் உயரம் 2668 அடி உயரம் ஆகும். இதைச் சுற்றி வரும் நான்கு புற பாதையும் செப்பனிடப்பட்டு அமைந்துள்ளது. கிரிவலம் வருவோர் சிரமமில்லாது இராப்பகல் எந்நேரத்திலும் சென்று வர ஒளி அமைக்கப்பட்டுள்ளது.

### தீர்த்தங்கள் :

அண்ணாமலையின் கிழக்கே, இந்திரனால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் ஒன்று இந்திரதீர்த்தம் இதில் தைப்பூசத்தன்று மூழ்கி ஒருகை நீர் உட்கொண்டால் கோடிப் பிரம்மஹத்தி தோஷம் போகும். அதன்கண் மூழ்கி இந்திரனும் தன் குற்றங்கள் நீங்கப் பெற்று, சூரியன் உள்ளளவும் விண்ணாட்டினை ஆளும் பேறு பெற்றான்.

அண்ணாமலைக்கு தென்கிழக்கில் அக்னி தீர்த்தம் என்று ஒன்று உண்டு. அதன்கண் பங்குனி மாதம் பௌர்ணமியில் மூழ்கினால் மாதர்களால் வந்து சேர்ந்த பாவம் நீங்கும். அறமும் தவமும் வந்தனையும் அக்னி தேவன் செய்த பாவத்தை இந்த அக்னி தீர்த்தத்தில் மூழ்கிப் பாவத்தை நீக்கிக் கொண்டான்.

அண்ணாமலைக்குத் தென்திசையில் எமன் தீர்த்தம் என்று ஒன்றுண்டு, அதன்கண் மூழ்கினால் உடல் பொன்னிறமாகும். உடல் நோய் நீங்கும். நான்முகனது படைதொடர்ந்துவர; அதனால் உடல்குன்றிய சாபத்தை எமன் தீர்த்தத்தில் மூழ்கித் தீர்த்துக் கொண்டான்.

அண்ணாமலையின் நிருதிமூலையில் நிருதித்தீர்த்தம் இருக்கிறது. அதில் மூழ்குபவர்க்கும் பகை நீங்கும். இதன்கண் மூழ்கிய பயனால் நிருதியானவன் நெருப்புப் போன்ற கண்களையும், பிளந்த வாயினையும் உடைய ஒருபேயைத் தன்வயம் ஆக்கிக் கொண்டான்.

அண்ணாமலைக்கு மேற்குத்திக்கில் வருண தீர்த்தம் என்று ஒன்றுண்டு. அதன்கண் விரும்பி மூழ்கினால் ஒன்பது கிரகங்களும் நன்மையைச் செய்யும் அந்தக்கிரகங்களும் அதன்கண் மூழ்கி வேண்டியவற்றைப் பெற்றன. அத்தீர்த்தத்தின் வாயுதிசையில் வாயு தீர்த்தம் இருக்கின்றது. அதில் மூழ்கினால் எல்லாத் துன்பமும் தீரும்.

அண்ணாமலையின் வடதிசையில் குபேர தீர்த்தம் ஒன்று உண்டு. அதன்கண் மூழ்கினால் அனைவரினும் மேம்பட்டுச் சிவபெருமானைச் சேர்வார்கள்.

எமன்தீர்த்தத்திற்குத் தெற்கே அகத்தியர் தீர்த்தம் இருக்கிறது. புரட்டாசி மாதத்தில் அதன்கண் மூழ்கித் தண்ணீரையும் உட்கொண்டவர் தம் முகத்தைப் பார்த்தவர்களும் தமிழ்க்கவி அரசர் ஆவார். திருமகளும் கலைமகளும் அவரிடத்தில் வந்து தங்கியிருப்பர். குபேர தீர்த்தத்தின் அருகே வசிட்ட தீர்த்தம் என்று ஒன்றுண்டு. அதன்கண் வசிட்டர் ஐப்பசி மாதத்தில் மூழ்கி முனிவர்கட்கெல்லாம் தலைமை பெற்றார். அத்தீர்த்தத்தில் மூழ்கியவர்க்கு எல்லாச் சாத்திரங்களும் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கும். பாவக் கடலையும் கடப்பார்கள்.

கங்கை, முருகன், விநாயகர், சூரியன், பார்வதி, வயிரவர், சப்தகன்னிகள், சந்திரன், அட்டவசுக்கள், கலைமகள், தேவர்கள் முழுகிய தீர்த்தங்கள் பலவுண்டு. அவற்றின் பெருமையை வேதங்களும் சொல்ல அறியா.!

**திருவண்ணாமலையின் வடக்குப் பக்கத்தில் திருநதி என்று ஒரு நதியுண்டு. அதன்கண் திருமகள் மூழ்கித் திருமாலின் மார்பினைச் சேர்ந்தார்.** நருமதை ஆற்றினால் வணங்கப்படும் சோணம் என்ற ஒரு நதி அண்ணாமலையின் தெற்கே இருக்கிறது. அதன்கண் கங்கை, யமுனை, காவிரி வந்து மூழ்கித் தன் துன்பத்தைப் போக்கிக் கொண்டனர், தெய்வத்தன்மையுள்ள அண்ணாமலையின் மேற்குதிசையில், "புண்ணியநதி" என்று ஒன்று உண்டு அதன் அருகே புண்ணியாற்றூர் என்று ஒரூர் உண்டு.





அதன் கண் வாழ்ந்த ஈழன் என்ற அரசன் தனக்குத் தீங்காக வந்தடைந்த பெண் உருவை அந்நதியில் மூழ்கிப் போக்கிப் பேறும் பெற்றான். இப்புண்ணிய நதிக்கு வடபக்கத்தில் "சேயாறு" எனும் ஆறு உள்ளது. அது முருகனால் உண்டாக்கப்பட்டது. அதன் கண் முருகப்பிரானே,; மூழ்கி அசுரர்களைக் கொல்லும் வரமும் தேவசேனாதிபதி என்னும் பேறும் பெற்றார்.

மேலும் அண்ணாமலைப் பெருமான் கோயிலில் உள்ளே "சிவகங்கை தீர்த்தம்" என ஒன்று உண்டு. இதனைத் தினந்தோறும் உள்ளத்தில் நினைத்தால் கங்கையில் மூழ்கிய பயன் உண்டாகும். அநேக உருத்திரர்கள் அதன் கண் மாசி மாதத்தில் மூழ்கி இடபாரூபராய் எல்லாத் தேவரினும் மேன்மை பெற்றார்கள்.

சிவகங்கை தீர்த்தத்தில் கிழக்கே சக்கரதீர்த்தம் இருக்கிறது. இது திருமால் வராக அவதாரம் எடுத்தபோது மூழ்கியதாகும். அதன்கண் மூழ்குவோரும்; அந்நீரையுண்டவர்களும் அதனை வலமாக வந்தவர்களும் துயரக்கடல் நீங்கிச் சிவபிரானது இருதிருவடிகளையும் இடமாக பெறுவர்.

அருள்நிறை அண்ணாமலையார் சந்நிதியில் அக்னி திசையில் பிரமனால் அமைக்கப்பெற்ற பிரம தீர்ததம் ஒன்றுண்டு. அதன்கண் மூழ்கியவர் பிறவிக் கடலில் நீந்திச் சென்ற பிறப்புகளில் சேர்ந்த தீவினைகள் நீங்கப் பெறுவர். அதன்கண் மூழ்கி அணுவளவு பொன்னைத் தானம் கொடுப்பாராயின், நவமணிகள் நிறைந்த நிலவுலகத்தையே ஒரு அடியவருக்குக் கொடுத்ததொரு பெரும் பதவியை அடைவர். இத்தீர்த்தத்தில் மூழ்கித் தானங்களைச் செய்தோர் சிவபெருமானின் அடிக்கமலத்தை அடைவார்கள்.

## குகைகள்

மலையின் மத்திய பாகத்தில் ஸ்ரீ கந்தாச்ரமம், விருபாக்ஷிகுகை, குகை நமச்சிவாயர் ஆலயம், மாமரத்துக்குகை, சடைச்சாமி குகை, ஆருட்பால் குகை, ஆலமரத்துக்குகை, ஸ்ரீ ரமண மகரிஷி தியானம் செய்த குகை மற்றும் பல சிறப்பாக அமைந்துள்ளன.

# 18. கார்த்திகைத் தீப திருவிழா

## முதல்நாள்

### காலை

### கொடியேற்றம் (துவஜாரோகணம்)

திருக்கார்த்திகைத் தீபதிருவிழா 17 நாட்கள் நடைபெறுகின்றன. முதல் மூன்று நாட்கள் துர்க்கை அம்மன் திருவிழா; பிடாரி அம்மன் திருவிழா; விநாயகப் பெருமான் ஆகிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன. திருவிழாவின் முதல்நாள் காலை கொடியேற்றம் நடைபெறுகிறது. சிவதீட்சை பெற்ற சிவாச்சாரியார்களால் கொடி ஏற்றி பஞ்ச மூர்த்திகள் இந்திரவிமானத்தில் வீதி உலா வருகிறார்கள்.

### இரவு

மூஷிகவாகனத்தில் விநாயகப் பெருமான், மயில் வாகனத்தில் முருகப்பெருமான், அதிகாரநந்தியில் அண்ணாமலையார் அன்னவாகனத்தில் அருள்தரும் உண்ணாமுலை அம்மை சின்ன ரிஷப வாகனத்தில் சண்டிகேசுவரர் ஆகியோர் மாடவீதி உலா வந்து மக்களுக்கு அருள் வழங்குகிறார்கள்.

## இரண்டாம் நாள்

### காலை

மூஷிகவாகனத்தில் விநாயகப் பெருமான், சூரியபிறை வாகனத்தில் சந்திரசேகரர் வீதிக்கு புறப்படுகிறார்கள்.

### இரவு

பஞ்சமூர்த்திகள் வெள்ளி இந்திர விமானத்தில் காட்சி தருகிறார்.

## மூன்றாம் நாள்

### காலை

மூஷிகவாகனத்தில் விநாயகப் பெருமானும், பூதவாகனத்தில் சந்திரசேகரரும் மாடவீதிக்கு வருகிறார்கள். அன்று 1008 சங்கு அபிஷேகமும் நடைபெறுகிறது.





### இரவு

பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு. அருள்தரும் அண்ணாமலையார் சிம்ம வாகனத்தில் காட்சி தருகிறார், விநாயகப் பெருமான், மூஷிகவாகனம் முருகப்பெருமான் மயில்வாகனம் அருள்தரும் உண்ணாமலை அம்மை, ரிஷபவாகனம் ஸ்ரீ சண்டிகேஸ்வரர் மாடவீதி வருகிறார்கள்.

## நான்காம் நாள்

### காலை

விநாயகர் மூஷிகவாகத்திலும், சந்திரசேகரர் நாகவாகனத்திலும் வீதி உலா வருதல்.

### இரவு

பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு, விநாயகர் - மூஷீக வாகனம், முருகர் வள்ளி தெய்வானையுடன்-வெள்ளிமயில், பெரிய நாயகர் - வெள்ளி கற்பக விருக்ஷம் உண்ணாமுலை அம்மை - வெள்ளி காமதேனு சண்டிகேகுஸ்வரர் - வெள்ளி இந்திர விமானம் ஆகிய வாகனங்களில் எழுந்தருளி வீதி உலா வருதல்

## ஐந்தாம் நாள்

### காலை

விநாயகர் மூஷிகவாகனத்திலும், சந்திரசேகரர் கண்ணாடி ரிஷப வாகனத்திலும் எழுந்தருளி வீதிஉலா வருதல்

### இரவு

விநாயகர் - வெள்ளி மூஷீக வாகனம், முருகர் வள்ளி, தெய்வானையுடன் - வெள்ளிமயில், பெரிய நாயகர் - வெள்ளி பெரிய ரிஷப வாகனம், உண்ணாமுலை அம்மை - வெள்ளி ரிஷப வாகனம், சண்டிகேஸ்வரர் - இந்திர விமானம், ஆகிய வாகனங்களில் எழுந்தருளி வீதிஉலா வருதல்.

## ஆறாம் நாள்

### காலை

விநாயகர் மூஷிகவாகனத்திலும், சந்திரசேகரர் வெள்ளி யானைவாகனம் அன்று காலை 63 நாயன்மார்கள் வீதி உலா வருதலும். ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதிய, வழங்கிய வழிபட்ட நாயன்மார்கள் 63 பேரும் உற்சவ மூர்த்தியாக வீதி உலா வருதல். பெரியபுராணம் எழுதிய சேக்கிழார் பெருமானும் வீதிஉலா வருகிறார்.

### இரவு

விநாயகர் - வெள்ளி விமானம், முருகர் வள்ளி, தெய்வானையுடன் - வெள்ளிவிமானம், பெரியநாயகர் - வெள்ளி இரதம் உண்ணாமுலை அம்மை - இந்திர விமானம் சண்டிகேஸ்வரர் - வெள்ளி விமானம் ஆகிய வாகனங்களில் எழுந்தருளி வீதிஉலா வருதல்.

## ஏழாம் நாள்

ஏழாம் நாள் காலை நல்லோரையில் பஞ்ச இரதங்கள் புறப்பாடு முதலாவதாக விநாயகர் இரதம், அதன்பின் வள்ளி தெய்வானையுடன் கூடிய முருகப் பெருமான் இரதம் மூன்றாவது பெரியதேர் எனப்படும். அருள் தரும் அண்ணாமலையார் திருத்தேர் புறப்பாடு ஆகும். நான்காவதாக அருள்தரும் உண்ணாமுலை அம்மை தேர் பெண்களே வடம் பிடித்து வீதி உலா வருதல் அதன்பின் சண்டிகேஸ்வரர் திருத்தேர் என அன்று முழுவதும் தேர்த் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். இரவு ஆஸ்தான மண்டபத்தை உற்சவ மூர்த்திகள் வந்து அடைதல்.

## எட்டாம் நாள்

### காலை

விநாயகர் மூஷிகவாகனத்திலும், சந்திரசேகரர் குதிரைவாகனத்தில் வீதிஉலா வருதல், மாலை 4-00 மணி அளவில் பிச்சாண்டவர் தங்க வண்ண மேருவில் வீதி உலா வருதல்.

### இரவு

விநாயகர் - மூஷிகவாகனம், முருகர் வள்ளி, தெய்வானையுடன் - குதிரை வாகனம், பெரியநாயகர் குதிரை வாகனம், உண்ணாமுலை அம்மை - குதிரைவாகனம், சண்டிகேஸ்வரர் - குதிரை வாகனங்களில். எழுந்தருளி வீதிஉலா வருதல்.





## ஒன்பதாம் நாள்

### காலை

விநாயகர் மூஷிகத்திலும், சந்திரசேகரர் கண்ணாடி விமானத்திலும் திருவீதி உலா வருதல்.

### இரவு

விநாயகர் - மூஷிகவாகனம், முருகர் வள்ளி, தெய்வானையுடன் - மயில்வாகனம் பெரிய நாயகர் - கைலாச வாகனம் உண்ணாமுலை அம்மை - காமதேனு வாகனம் சண்டிகேஸ்வரர் - விமான வாகனம் ஆகிய வாகனங்களில் எழுந்தருளி வீதி உலா வருதல்.

## பத்தாம் நாள்



**அதிகாலை** 4-00 மணிக்கு பரணி தீபக் காட்சி நண்பகல் 12-00 மணிக்கு பிரம்ம தீர்த்தத்தில் தீர்த்தவாரி - **மாலை** 6-00 மணிக்கு பஞ்சமூர்த்திகள் தங்கவண்ண இந்திர விமானங்களில் எழுந்தருளி மலை மீது ஜோதிஸ்வரூபமாக மகாதீப தரிசனம்.

### இரவு

தங்க வண்ண ரிஷப வாகனத்தில் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா வருதல்.

**தெப்பல் உற்சவம் :** தீபதரிசனம் முடிவுற்றதும் அடுத்து மூன்று நாட்களும் அய்யங்குளத்தில் தெப்பத்திருவிழா நடைபெறுகிறது.

இறுதியாக சண்டிகேஸ்வரர் உற்சவத்துடன் திருவிழா நிறைவு அடைகிறது.

“திருச்சிற்றம்பலம்”

## 19.திருக்கோயில் கால பூஜை வகைகள் :

அதிகாலை 5.00 மணி கோபூஜை

| | |
|---|---|
| 5.15 பள்ளியெழுச்சி பூஜை | மாலை 5.30 சாயரட்சை பூஜை |
| 5.30 உஷக்கால பூஜை | 7.30 இரண்டாம் கால பூஜை |
| 8.00 கால சந்தி பூஜை | 9.00 அர்த்தஜாம பூஜை |
| 11.30 உச்சிக்கால பூஜை | 9.30 பள்ளியறை பூஜை |

## 20. பௌர்ணமி கிரிவலம் சிறப்பு :

திருவண்ணாமலை எனும் சிறப்புற விளங்கும் இம் மலையானது 2668 அடி உயரமுள்ளது. கயிலை மலையில் இறைவன் இருப்பதால் சிறப்பு. ஆனால் இங்கு மலையே சிவலிங்கமாக காட்சியளிப்பது மாபெரும் சிறப்பாகும்.

நிலவியல் நிபுணர்கள் மலையை நான்குவகை என்பார்கள் அதில் அவர்கள் இந்த மலையை நெருப்பினால் வந்து குன்று (Igneous Rock)என்கின்றனர்.

இம்மலைக்கு ‘அருணாசலம்’ என்ற பெயரும் உண்டு. “அருணம்” என்றால் சூரியன் என்று பொருள் நெருப்பின் நிறமான சிவப்பைக்குறிக்கும் ‘அசலம்’ என்றால் கிரி என்றும் மலைஎன்று பொருள். எனவே ‘அருணாசலம்’ என்றால் சிவந்த நிறத்தையுடைய மலை என்று பொருள்.

இங்கு மலையே லிங்க வடிவமாக காட்சியளிப்பதால் கார்த்திகை தீபத்திருவிழா நாளைத் தவிர மற்ற நாட்களில் மலைமீது எவரும் செல்லமாட்டார்கள். எனவே மலைமீது செல்ல படிகள் எதுவும் கிடையாது.

இத்துணை சிறப்பு வாய்ந்த மாபெரும் மலையாக இறைவன் எழுந்தருளியுள்ளார். இதனால் மலையாகிய இறைவனுக்கு அபிஷேகம் செய்விக்கவும், பூமாலை சூட்டவும், வில்வம் போட்டு அர்ச்சிக்கவும் மனிதர்களால் முடியாது. தேவர்களாலும் முடியாது என்பதால் எல்லோரும் வழிபட வசதியாக எளிமையாக மலையின் அடிவாரத்தில் சிறிய அளவில் சுயம்பு லிங்கமாக சிவபெருமான் தோன்றி அருளினார். அதுவே நாம்வழிபடும் அண்ணாமலையார் திருக்கோவிலாகும்.





இம்மலையின் அமைப்பு கீழ்த்திசையிலிருந்து பார்த்தால் ஒன்றாகத் தெரியும். இது ஏகனைக் குறிக்கும். மலை சுற்றும் வழியில் இரண்டாக தெரியும். இது அர்த்தநாரிஸ்வரரை குறிக்கும். மலையின் பின்னால் மேற்குத் திசையில் இருந்து பார்த்தால் மலையானது மூன்றாகத் தெரியும். இது திருமூர்த்திகளை நினைவூட்டும். மலைசுற்றி முடிக்கும் தருவாயில் மலை ஐந்து முகங்களுடன் காணப்படும். இது சிவபெருமானின் ஐந்து திருமுகங்களைக் குறிக்கும்.

இந்த மலையின் சிறப்பை உணர்ந்த பாண்டிய மன்னன் வச்சிராங்கதன் மலையை வலம் வந்து கயிலாயம் அடைந்தான். தேவர்கள் அனைவரும் வணங்கி சிறப்பித்த இந்த மலை கலியுகத்தில் கல் மலையாக காட்சி அளிக்கிறது.

அண்ணாமலையார் திருக்கோவிலில் இறைவனை வணங்கி மலை சுற்ற தொடங்க வேண்டும். எந்த இடத்தில் தொடங்கினோமோ அதே இடத்தில் வந்து மலைசுற்றுவதை முடிக்க வேண்டும்.

### ஒவ்வொருநாளின் சிறப்பு :

ஞாயிற்றுக்கிழமை மலைசுற்றினால் சிவபதம் கிடைக்கும். திங்கட்கிழமை மலைசுற்றினால் உலகையே ஆளக்கூடிய வல்லமை கிடைக்கும். செவ்வாய்க்கிழமை மலைசுற்றினால் ஏழ்மை தொல்லைகள் தீரும். கடன்கள் அகலும், சுபிட்சம் உண்டாகும். பிறவிப்பிணியிலிருந்து விடுதலை கிடைக்கும். புதன்கிழமை வலம் வந்தால் கலைகளில் தேர்ச்சி கிடைக்கும். வியாழக்கிழமை வலம் வந்தால் ஞானிகளுக்கு ஒப்பான நிலையை அடைவர். வெள்ளிக்கிழமை வலம் வந்தால் விஷ்ணு பதம் கிடைக்கும். சனிக்கிழமை வலம் வந்தால் நவக்கிரங்களை வழிபட்ட பலன் கிடைக்கும்.

பிறவிப்பிணி நீங்க வேண்டுமென விரும்பும் எவரும் அண்ணாமலையாரை வணங்கி மலைசுற்றிவருவதன் மூலமே தத்தமது கருமாவை குறைத்துக்கொள்ள முடியும்.

### “வா” - என்று அழைக்கும் மலை :

எண்ணற்ற சித்தர்களும், ஞானிகளும், தபோதனர்களும், முனிவர்களும், ரிஷிகளும், செம்பொன்மலையான சிவஜோதியில் அய்க்கியமாகத் தவம் இருப்பதும் இந்தமலையில்தான். மலையில் உலவும் மகாஞானிகள் வலம்வரும்போது நாம் மலைசுற்றினால் அவர்களின் தெய்வீக மணத்தை நாம் சுவாசிக்க முடியும். மலைவலம் வரும்போது பல இடங்களில் மூலிகை மணம் வீசும் இதனால் நோய்கள் தீரும் என்பது, இறைவன் இல்லை என்பாரும் ஒத்துக்கொண்ட உண்மை.

## 21. பிரார்த்தனைச் சிறப்பு :

### 1.தங்கரதம் இழுத்தல்

நினைக்க முத்தி தரும் திருவண்ணாமலை சிறப்பு வாய்ந்ததும், பௌர்ணமி கிரிவலம் சிறப்புடையதுமான இத்திருத்தலத்தில் பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க திருக்கோயில் நிதியிலிருந்து 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அழகிய வேலைப் பாடுகளுடன், சிற்பக்கலை நயத்தோடு புதியதாக தங்கரதம் செய்யப்பட்டு உற்சவர் சந்திரசேகரர் தங்கரதத்தில் எழுந்தருளச் செய்து கடந்த **16-03-2006ல்** திருக்கோயில் மூன்றாம் பிரகாரத்தில் பவனிவர, தங்கரதம் வெள்ளோட்டம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து எண்ணற்ற பக்தர்கள் தங்கரதம் இழுத்து பிரார்த்தனை செலுத்தி வருகின்றார்கள். தங்ரதம் இழுக்க விரும்பும் பக்தர்கள் திருக்கோயில் அலுவலகத்தில் **ரூ. 1500/-** கட்டணம் செலுத்தி, தாங்கள் விரும்பும் நாளன்று காலை (அ) மாலையில் (திருவிழா நாட்கள் நீங்கலாக) தங்கரதம் இழுத்து பிரார்த்தனை செலுத்தலாம்.







### 2. கரும்பு தொட்டில் கட்டுதல் :

நீண்டநாள் குழந்தைப் பேறு இல்லாதவர்கள், குழந்தைச் செல்வம் வேண்டி, அண்ணாமலையாரை பிரார்த்தித்து, குழந்தை பிறந்ததும் திருக்கோயிலுக்கு கரும்பு கட்டுகள் கொண்டு வந்து அர்ச்சனை செய்து புதிய புடவையால் தொட்டில் கட்டி குழந்தையை கரும்புத் தொட்டிலில் படுக்க வைத்து திருக்கோயில் 3-ம் பிரகாரம் அல்லது மாடவீதி வலம் வந்து பிரார்த்தனை செலுத்துவது, எந்த திருக்கோயிலிலும் இல்லாத பிரார்த்தனைச் சிறப்பாகும்.

### 3. கார்த்திகைத் தீப பிரார்த்தனை நெய்குடம் கட்டுதல் :

சேவார்த்திகளின் பிரார்த்தனையில் உச்சகட்டமாக அமைவது கார்த்திகை தீபத்திற்கு நெய்குடம் கட்டுதலாகும். இதற்கு திருக்கோயில் மூலம் தரமான நெய், “ஆவின்” நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு குறைந்த விலையில் சேவார்த்திகளுக்கு நெய்குடம் செலுத்த வழங்கப்பட்டு அவை அனைத்தும் மலை உச்சிக்கு கார்த்திகை தீபத்திற்கு அனுப்பப்படுகிறது. நெய்குடக் காணிக்கைகளை சேவார்த்திகள் மணியார்டர் (அ) காசோலை (அ) டிமாண்ட் டிராப்ட் மூலம் திருக்கோயில் அலுவலகத்திற்கு அனுப்பி பிரார்த்தனை நிறைவேற்றலாம்.



## 22. வருடாந்திர / நிரந்தர கட்டளை அர்ச்சனை திட்டம்

பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமான திருவண்ணாமலையில் உங்களது துன்பங்களும், துயரங்களும் களைந்து, என்றென்றும் மனஅமைதிபெற அருள்மிகு அண்ணாமலையாருக்கு அர்ச்சனை செய்விக்கும் வருடாந்திர / நிரந்தர கட்டளை அர்ச்சனை திட்டத்தில் சேர்ந்து அருள்பெற வேண்டுகிறோம்.

**மாதந்தோறும் அர்ச்சனைசெய்து**
**பிரசாதம் அனுப்ப ஒரு வருடத்திற்கு மட்டும் ரூ. 250/-**
**ஆயுள் முழுவதும் மாதந்தோறும் அர்ச்சனை**
**செய்து பிரசாதம் அனுப்ப நிரந்தர கட்டளைக்கு ரூ.5000/-**

பிறந்தநாள், திருமண நாள், விசேஷ நாட்கள் அல்லது உங்களுக்குப் பிரியமானவர்கள் பெயரில், அவர்களது நட்சத்திரத்தில், அவர்களுக்கு உகந்த நாட்களில் அருள்மிகு அண்ணாமலையாருக்கு அர்ச்சனை செய்து விபூதி குங்கும பிரசாதத்தை அவரவர் இருப்பிடத்திலேயே பெறச் செய்கின்றோம்.

மேற்கண்டவாறு தொகையினை மணியார்டர் / டிமாண்ட் டிராப்ட் / காசோலை மூலம் செலுத்தி உரிய படிவத்தை திருக்கோயிலில் பூர்த்தி செய்து இந்த கட்டளை அர்ச்சனை திட்டத்தில் சேர்ந்து அருள்மிகு அண்ணாமலையார் அருள்பெற வேண்டுகிறோம்.

கட்டளை அர்ச்சனை மற்றும் திருக்கோயில் பற்றி மேலும்
விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டி முகவரி :

**இணை ஆணையர் / செயல் அலுவலர்**
**அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில்**
திருவண்ணாமலை - 606 601.
தொலைபேசி : 04175 - 252 438.





## அருள்மிகு அண்ணாமலையார் புகழ்பாடும் நூல்கள்

1. தேவாரம்
2. திருவாசகம்
3. பதினொராந்திருமுறை
4. பெரியபுராணம்
5. கந்தபுராணம்
6. திருப்புகழ்
7. சோனசைலமாலை
8. திருவருணைக்கலம்பகம்
9. அருணாசலபுராணம்
10. அருணாசல மகாத்மிய வசனம்
11. அருணகிரி அந்தாதி
12. அண்ணாமலை வெண்பா
13. திருவருணை அந்தாதி
14. அண்ணாமலை சகதம்
15. சாரப்பிரபந்தம்
16. கார்திகை தீப வெண்பா
17. சோணாசல வெண்பா
18. சோணாசல சதகம்
19. திருவருணைக்கலிவெண்பா
20. திருவண்ணாமலை திருவருட்பதிகம்

21. அருணாசலேசுவரர் பதிகம்-1
22. அருணாசலேசுவரர் பதிகம்-2
23. உண்ணாமுலையம்மன் சதகம்
24. அருணாசலேசர் நவகாரிகை மாலை
25. உண்ணாமுலையம்மன் வருகைப்பதிகம்
26. அருணாசல சதகம்
27. அருணாசல அட்சரமாலை
28. அண்ணாமலையார் வண்ணம்
29. திருவண்ணாமலைப்பதிகங்கள்
30. அண்ணாமலைப் பஞ்ச ரத்னம்
31. திருவருணைத் தனி வெண்பா
32. அட்சரப் பாமாலை
33. ஸ்ரீ அருணாச்சலேசுவரர் உயிர் வருக்கம் படைத்தற் பாமாலை
34. அருணசல அக்ஷரமணிமாலை
35. அருணாசலநவமணிமாலை
36. அருணாசல பதிகம்
37. அருணாசல அஷ்டகம்
38. அருணாசல பஞ்சரத்னம்



திருவண்ணாமலை திருத்தலவிளக்கம்

